விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 23
ஒலி 182 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 05 ஞாயிற்றுக்கிழமை (19.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### ஜுலை 1ஆம் திகதி தொடக்கம்
## யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் சேவைகள் மீளவும் ஆரம்பம்
### யாழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் சேவைகள் எதிர்வரும் ஜுலை 1ஆம் திகதி தொடக்கம் மீளவும் ஆரம்பமாக வுள்ளது என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரி 23

## விசுவமடுவில் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம்
### எரிபொருள் நிலையத்தில் பொதுமக்களுடன் முரண்பாடு

(விசுவமடு)

விசுவமடு எரிபொருள் நிலையத்தில் பொதுமக்கள் - இராணுவத்தினரிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இராணுவத்தால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

விசுவமடு எரிபொருள் நிரப்புநிலையத்திற்கு முன்னால் உள்ள இராணுவக் காவலர 23

### எரிபொருள் நெருக்கடியால்
# சுகாதாரத் துறை செயலிழக்கும் அபாயம்
### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அபாய எச்சரிக்கை



*(கொழும்பு)* எரிபொருள் நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு காணாவிட்டால், இன்னும் ஓரிரு வாரங்களில் இலங்கையின் சுகாதாரத்துறை முற்றாகச் செயலிழக்கும் அபாயத்தில் இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. *(23ஆம் பக்கம் பார்க்க)*

### கட்டுப்பாட்டு விலையில்
## இன்று முதல் அரிசி விநியோகம்

(கொழும்பு)

அனைத்து அரிசி உற்பத்தியாளர்களும் இன்று முதல் அரசாங்க கட்டுப்பாட்டு விலையில் சந்தைக்கு அரிசியை விநியோகிக்க வேண்டும் என அரலிய அரிசி கூட்டுத்தாபனத்தின் பிரதானி டட்லி சிறிசேன தெரிவித்தார்.

அதனடிப்படையில் எத்தகைய பிரச்சினை இருந்தாலும் இன்று முதல் அரசாங்கக் கட்டுப்பாட்டு விலையில் அரிசியை 23

## 1ஆம் திகதி முதல் பங்கீட்டு முறையில் யாழில் எரிபொருள் விநியோகம்
### யாழ்.அரச அதிபர் மகேசன்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 1ஆம் திகதி முதல் பங்கீட்டு முறையில் யாழில் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார். 23

### தருமபுரம் கல்மடு நகரில்
## இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(தருமபுரம்)

தருமபுரத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் 26 வயதுடைய இளவரசன் கலையரசன் என்னும் ஒரு பிள்ளையின் தந்தை தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

ராஜ் ஜுவல்லர்ஸ்
அடகு பிடிப்பவர்கள்
Best Choice
1 பவுண் 22 கரட்டிற்கு
140,000/=

(11747)
1 வருட கால அவகாசம் உங்களுக்கு நாங்கள் தருகின்றோம்.
இல. 31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (சந்தைக்கு அருகில்)
Tel : 021 221 7287 / 076 636 1238

### கடுமையான எரிபொருள் நெருக்கடி
## கொழும்பு பாடசாலைகளுக்கு அடுத்த வாரம் விடுமுறை

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் கொழும்பு வலயம் மற்றும் சூழவுள்ள நகரங்களில் உள்ள பாடசாலைகள், ஏனைய மாகாணங்களின் பிரதான நகரங்களில் உள்ள பாடசாலைகள் 23

### ஆனைக்கோட்டையில்
## சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை முள்ளிப் பகுதியில் 65 வயதுடைய நபரொருவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை மேற்கு 23

## பொலிஸாருக்கு இடையூறை ஏற்படுத்தாதீர்

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்று எரிபொருள் நிரப்பும் பொலிஸ் உத்தியோகத் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட ஐரோப்பாவில் பிரஜாவுரிமை பெற்று வசிக்கும், இந்திய வம்சாவளி தமிழ் இந்து செட்டியார், மகரம் திருவோண நட்சத்திரத்தில் 1982 இல் பிறந்த இளமை தோற்றமுள்ள மணமகனுக்கு படித்த, 32 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

முழு விபரங்களுடன் 00351 961 869 985 எனும் இலக்கத்தில் வட்ஸ் அப் மூலம் தொடர்புகொள்ளுங்கள். (11912)

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 45 வயது நபருக்கு உறுப்புமாற்று சிகிச்சை செய்வதற்கு 0+ அல்லது 0- குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-4513)

077 620 3932
076 322 1975

## வீடு தேவை

நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி மற்றும் கச்சேரி நல்லூர் வீதி ஆகிய இடங்களில் வீடு விற்பனைக்கு வேண்டும்.
வீட்டின் உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும். (11918)

076 801 5646

## காணி தேவை

இரணைமடு நீர்ப்பாசனத்திற்குட்பட்ட உறுதிக்காணி (வயல்) மற்றும் யாழ்./கிளி. மாவட்டத்தில் நகரப் பகுதியை அண்மித்த குடியிருப்புக்கான காணி விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும். (தரகர் தேவையில்லை) (11926)

077 414 5144
Viber / Whatsapp
077 330 1798


# வாகன இலக்கங்களின் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

உந்துருளிகளின் இலக்கத்தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்க யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் போக்குவரத்து சங்கங்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அகில இலங்கை போக்குவரத்து ஒன்றிணைந்த செயற்பாட்டு மத்திய நிலைய இணைப்பாளர் ஜே.இமாம்டின் முச்சக்கர வண்டிகளுக்கு நாளாந்தம் 8 லீற்றர் எரிபொருளை பெற்றுக்கொடுக்க இதன்போது இணக்கம் வெளியிடப்பட்டதாக குறிப்பிட்டார். (ம-7)

# துப்பாக்கிச் சூடு இளைஞன் பலி

பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கியை நபர் ஒருவர் கைப்பற்ற முயற்சித்த சம்பவத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் மொரவக பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

போதைப்பொருள் தொடர்பில் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நெலுவ பொலிஸ்நிலைய அதிகாரிகள் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த வேளையில் காலி நெலுவ பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-7)


## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
## Water Proofing

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- கட்டடங்களில் ஏற்படும் வெடிப்புக்களை உத்தரவாதத்துடன் சீர்செய்து கொள்ள இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பொருட்கள் மற்றும் கட்டடக் கம்பிகளில் ஏற்பட்ட துருப்பிடித்தலை அகற்றும் இரசாயனப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

உலகத்தரம்மிக்கது

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

வட மாகாணத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள் (11916)

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

North and East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணைச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?


கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (11922)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

# ஆறுமுகம் வேலாயுதம்



அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலாயுதம் அவர்கள் 15.06.2022 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் பா.இலட்சுமிப்பிள்ளை, அமரர் ஆ.நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லோகேஸ்வரன் (சுவிஸ்), கோமதி (ஜேர்மனி), தர்மசிறி (சுவிஸ்), பானுமதி (ஆசிரியை - யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை), குணசிறி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆ.சிவராசா, அ.குணசிங்கம், சுதாஜினி, மோகனரதி, லோஜினி ஆகியோரின் மாமனாரும் சரண், சானுஜன், சாயிஜன், சோபனா, ஜெயரூபி, சிவமாறன், ஜெனனி, தர்மிலன், மலரவன், தர்மினி, வருண்சங்கர், அருள்சங்கர், அகில், அபினா ஆகியோரின் பேரனும் திவ்வியா, தருண், தனிஸ்கரன், கௌரிசன், மீனா, ராம் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (20.06.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் அம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பன், குடத்தனை. தகவல்: குடும்பத்தினர் 077 ... (C-4511)


# NORTH LANKA IIT CITY CAMPUS

UGC AND UNESCO APPROVED UNIVERSITIES

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலவச பட்டப்படிப்பு
B.sc in Agriculture Science - 3 years
தகைமை: A/L 3Passes
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

B.sc in Agriculture Science (top - Up) 1 Years
தகைமை: 2 Years Diploma / NVQ Level - 6 in Agriculture Science

M.sc in Agriculture Science 1 Year
தகைமை: B.sc in Agriculture Science

P.hD - 3 Years
தகைமை: Any Master Degree

விண்ணப்ப படிவங்களை அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிக்கவும்
முடிவுத் திகதி: 27-06-2022
கற்கை நெறி ஆரம்பம் 01-07-2022 (C-4505)

தொடர்புகளுக்கு:
North Lanka IIT City Campus
Top Floor, Peoples Bank Building,
Stanley Road, Jaffna.
T.P: 0767504535 , 0776779348


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 23 - 06 - 1948

இறப்பு 18 - 06 - 2022

## கந்தையா சிவராசா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மருதடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா அவர்கள் நேற்று (18.06.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் சந்திரராசா அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மோகனாம்பிகையின் அன்பு மைத்துனரும் கஜேந்திரா, சுரேந்திரா, காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜகரன், மயூரி, மயூரிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் நைனிக்கா, கிருத்திக், ஆதித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-4512)

இல. 02, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

077 315 4070

தகவல் :-
குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு

- தெல்லிப்பளை வறுத்தலைவிளானில் 5 பரப்பு காணி விற்பனைக்கு. மொத்த விலை - 43,00,000/=
- வசாவிளானில் 20 பரப்பு காணி விற்பனைக்கு, காணி பிரித்து கொடுக்கப்படும். தோட்டம் செய்ய வீடு கட்ட உகந்த காணி.

(11920)

077 423 5458
075 262 7584

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# கண்ணீர் அஞ்சலி



வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த
**சி.சுரேந்திரா** அவர்களின்
அன்புத் தந்தையார்

அமரர்
**கந்தையா சிவராசா**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

வலம்புரிக் குடும்பம்

# மரண அறிவித்தல்

## சுப்பையா இரட்ணவேல்

### (ஓய்வுபெற்ற ஆசிரியர்)



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இரட்ணவேல் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கடந்த 15.06.2022 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் புஸ்பரட்ணத்தின் அன்புக் கணவரும் தம்பு - அன்னபூரணத்தின் அன்பு மருமகனும் தபோதினி, மகீபன் (பெரி), மகிந்தன் (சீனா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசலிங்கம் (இலங்கை), ரோகினி (லண்டன்), டிலானி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீராம், ஜெராம், மயூரி, நித்தியா, ஓவியா, இனியா, இலக்கியா ஆகியோரின் அன்புப் பேரனும் நல்லம்மா (பரிபூரணம்), கந்தையா, இராசம்மா மதியாபரணம், யோகம்மா நடராசா, புவனேஸ்வரி பசுபதிப்பிள்ளை, மகாலட்சுமி மகாலிங்கம், மருதலிங்கம் கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகிர்தரட்ணம், முத்துராஜா ஆகியோரின் மைத்துனரும் முருகேசு அன்னம்மா, சுப்பிரமணியம் நவமணிதேவி, இரட்ணராஜா வேதா ஆகியோரின் அன்புச் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (19.06.2022) காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 மணியளவில் பண்டத்தரிப்பு தேவாலயத்தில் பூதவுடல் வைக்கப்பட்டு 4 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி,

(11921) தொ.பே: 077 [illegible] 5067

தகவல்: தபோதினி (மகள்)
இரட்ணராஜா வேதா குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் 7.8 வீதத்தினால் வீழ்ச்சியடையும்

## உலக வங்கி தெரிவிப்பு

**(வோஷிங்டன்)** மின்சார, உணவு, எரிபொருள் தட்டுப்பாடுகளுடன் இலங்கை கடுமையாக போராடிக் கொண்டிருக்கும் நிலையில் இந்த வருடம் நாட்டின் பொருளாதாரம் 7.8 வீதத்தினால் வீழ்ச்சியடையும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

பொருளாதாரத்தை மோசமாக கையாண்டதன் காரணமாக இலங்கையின் வரலாற்றில் இல்லாதாவாறு அந்நிய செலாவணி முற்றாக முடிவடைந்துள்ளதால் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக 2024ஆம்ஆண்டு அளவிலேயே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சாதகமான நிலையை நோக்கி முன்னேறும் என உலகவங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன் 2023இல் இலங்கையின் பொருளாதாரம் 3.7 வீதத்தினால் வீழ்ச்சியடையும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் அதிகளவு நிச்சயமற்றவையாகவும்,குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஆபத்தைக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன .

இலங்கை கடும் பொருளாதார நெருக்கடிகளையும் அதிகரித்துவரும் அரசியல் நிச்சயமற்ற தன்மையையும் எதிர்கொண்டுள்ளது. மின் துண்டிப்பு தொடர்கின்றது உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் நுண் பொருளாதார ஸ்திரதன்மையை மீட்டமைத்தல் ஆகிய நடவடிக்கைகளை அதிகாரிகள் தாமதப்படுத்தினால் பொருளாதார வீழ்ச்சி மேலும் மோசமடையலாம்.கடன் மறுசீரமைப்பு என்பது நிதிபுனர்வாழ்வு நடவடிக்கை களை மீள ஆரம்பிப்பதற்கு மிகவும் அவசியமானது.

நாளாந்தம் உணவுப் பொருட்களின் விலைகள் மிகவும் உயர்வது குறித்தும் அதன் காரணமாக வறியவர்கள் பாதிக்கப்படுவது குறித்தும் உலக வங்கி கவலை வெளியிட்டுள்ளது. (நி-6)

# நாட்டின் போக்கை மாற்ற ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

தெளிவான திட்டம் இல்லாத நாட்டின் போக்கை திருத்தியமைக்க வேண்டும் என பாரளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் எனவும், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை அமைப்பது பிரதமரின் பொறுப்பு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதும், பொது மக்களுக்கு விடயங்களை விளக்குவதும், நாட்டை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவதும் இன்றியமையாதது என்றும் தெரிவித்தார்.

உரிய தலைமைத்துவமும் வழிகாட்டுதலும் இல்லாவிட்டால் நாடு முற்றாக ஸ்தம்பித்துவிடும் அபாயம் காணப்படுவதாகவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (நி-6)

# இராஜதந்திர ரீதியில் ஏற்பட்டுள்ள விரிசல் இலங்கைக்கு கடன் வழங்க தயங்கும் இந்தியா

(கொழும்பு)

இலங்கையின் அண்மைய நம்பிக்கை மீறல் காரணமாக, இலங்கைக்கு அடுத்த 500 மில்லியன் டொலர் எரிபொருள் கடன் வசதியை வழங்க இந்தியா தயங்குவதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் எரிபொருள் விநியோகம் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ள நிலையில், கடன் சலுகை தொடர்பான பேச்சுவார்த்தை கடந்த வாரம் நிறுத்தப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னதாக இந்தியா வழங்கிய எரிபொருள் கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு 40 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை ஏற்றிக் கொண்டு இறுதி கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்நிலையில், எதிர்காலத்திற்கான எரிபொருள் கிடைப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் கடனுதவி வழங்குவது குறித்த நெருக்கடிக்கு முக்கிய காரணம் இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியில் ஏற்பட்டுள்ள விரிசல் காரணம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் எம்.எம்.சி பெர்டினாண்டோ மன்னார் அனல்மின் நிலையம் தொடர்பில் அண்மையில் கோப் குழுவில் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் அதானி குழுமத்தினால் மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்திற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுத்ததாக கோப் குழுவில் இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் தெரிவித்திருந்தார்.

இந்த அறிக்கை இரு நாடுகளிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், சில உள்ளூர் குழுக்கள் மத்தியில் இந்தியாவுக்கு எதிரான உணர்வை உருவாக்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.(நி-6)

# பாடசாலையில் கல்வி சாரா ஊழியர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்க இணக்கம்

(கொழும்பு)

பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு பணிக்கு சமூகமளிக்க சுசில் பிரேமஜயந்த இணக்கம் தெரிவித்துள்ளதாக கல்விசாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த சங்கத்தின் பொதுச் செயலாளர் அஜித் கே திலகரத்ன, தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு நியாயமான தீர்வாக வேலைத் திட்டத்தின் முதல் கட்டமாக பாடசாலை காவலர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

கல்வி சாரா ஊழியர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் வேலைத்திட்டம் தென் கொரியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

நாடு முழுவதுமான முடக்கம் அர்சாங்கத்தால் திட்டமிடப்படாது. ஆனால் குறுகிய திட்டமிடப்படாத முடிவுகளால் மக்கள் நிலவும் பிரச்சினைகளை சமாளிக்க இயலாமையின் விளைவினால் அந்நிலைமை ஏற்படுமெனவும் தெரிவித்துள்ளார். (நி-6)

# நெருக்கடி நிலை காரணமாக மூடப்பட்டது பேராதனை பல்கலை

(கண்டி)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக பேராதனை பல்கலைக்கழகம் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்படுகிறது என பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமவன்ச தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் உட்பட பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தி வைக்கப்படுகின்றன. அத்துடன் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களும் விடுதிகளை விட்டு உடனடியாக வெளியேறுமாறும் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

பரீட்சைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட பீடங்கள் ஊடாக பின்னர் அறிவிக்கப்படும் எனவும் துணைவேந்தர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# பெற்றோல் கையிருப்பு முற்றாக தீர்ந்துவிடும் நிலை

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பெற்றோல் கையிருப்பு முற்றாக தீர்ந்துவிடும் நிலைக்குச் சென்றுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் நாளொன்றுக்கான பெற்றோல் தேவை 3,000 மெற்றிக் தொன்களைத் தாண்டி அதிகரித்துள்ளது. ஆனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நாளொன்றுக்கு 50 மெற்றிக் தொன் பெற்றோலை மட்டுமே விநியோகிக்க முடிகிறது.பெற்றோலுடன் அடுத்த கப்பல் 20 ஆம் திகதியே வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், அதனை இறக்குவதற்கு முன் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். அது அடுத்த கட்ட சவாலாக இருக்கும் எனவும் கருதப்படுகிறது.

இதேவேளை, இலங்கையில் சுப்பர் டீசல் ஏற்கனவே முற்றாகத் தீர்ந்துவிட்டதாகவும், மீண்டும் எப்போது சுப்பர் டீசல் வரும் என்பது குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை முழுவதும் அனைத்து வகை எரிபொருட்களுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் மக்கள் நாட்கணக்கில் காத்திருந்து தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய பிரதிநிதிகள் குழு நாளை இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நாளை 20ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்படவுள்ள கடன் தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே குறித்த குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

அவர்கள் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளை சந்திக்கவுள்ளதாக நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி-6)

# இணையவழி கற்றல் நேரங்களில்

## மின்துண்டிப்பு இல்லை

(கொழும்பு)

நாளை திங்கட்கிழமை முதல் இரண்டு வாரங்களுக்கு காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையான காலப்பகுதியினுள் மின்துண்டிப்பை மேற்கொள்ளாதிருக்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு வாரங்களில் இணையவழியில் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏதுவான வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர். வைரவன் சீதேவி

(A.M.A கல்வி நிலைய நிர்வாகி திரு.வை.தவம் ஆசிரியர் அவர்களின் அன்புத் தாயார்)

ஆற்றொணாத் துயரைத் தந்து
அன்னையே மறைந்து போனாய்
காற்றினில் கரைந்து போன
கவினுறும் மாண்பே உன்னைக்
கூற்றுவன் கவர்ந்து போகக்
குவலயம் இருண்டதாகித்
தேற்றுவோர் இன்றி நாமும்
தேம்பியே நிற்கின்றோம் பார்.

(1904)

ஆசிரியர்கள்
A.M.A கல்வி நிலையம். அளவெட்டி, மல்லாகம்.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 15 - 12 - 1937



மறைவு 15 - 06 - 2022

அமரர். சின்னத்தம்பி அம்பிகாவதி

(முன்னாள் தலைவர், கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், கொக்குவில்.)

அன்னார் ஆலய நிர்வாக சபையின் தலைவர்,செயலாளர்,பொருளாளர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து நீண்ட காலமாக அரும்பெரும் சேவையாற்றியது குறிப்பிடத்தக்கது.அன்னார் மஹோற்சவ குடும்பம் சார்ந்தவரும் ஆலய வளர்ச்சிக்கு வருடா வருடம் தமது குடும்பத்தினூடாக அரும்பெரும் உதவிகள் செய்து வருவது பாராட்டத்தக்கது.
அன்னாரின் மறைவு ஆலயம் சார்ந்தவருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் பாரிய இழப்பாகும்.அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கிருபாகரனை வேண்டி நிற்கின்றோம்.

(1910)

நிர்வாக சபை,
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், கொக்குவில்.

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 1944 . 04 . 20



விண்ணில் 2022 . 06 . 17

அமரர்.இராஜேஸ்வரி சோமசுந்தரம்

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி. **ஞானாம்பிகை கமலதாசன்** அவர்களின் பாசமிகு தாயார் அமரர். **இராஜேஸ்வரி சோமசுந்தரம்** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

(1911)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை, புத்தூர்.

# இராசிபலன்

19.06.2022
ஆனி 05, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி காலை 6.26 மணிவரை

சஷ்டி பின்னிரவு 4.40 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 12.02 மணிவரை
சுபநேரம் 8.54-10.24 மணிவரை

இராகுகாலம் 4.24-5.54 மணிவரை
சர்வதேச தந்தையர் தினம்
சந்திராஷ்டமம் -புனர்பூசம் , பூசம்

**வளவன்**




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சொன்ன சொல்லை காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பகை விலகி பாசம் கூடும் நாள், பயணங்கள் கைகூடும்.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்.




தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், வெளியூர்ப்பயணங்கள் விருப்பத்தை நிறைவேற்றும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்,போசன சுகமுண்டு




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்,கடன் பாக்கிகள் திடீரென வசூலாகலாம், தொலை பேசி வழியில் சுப தகவல்கள் வந்துசேரலாம்.




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்,பிள்ளைகளால் பெருமைகள் வந்துசேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்,பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.




சந்தித்த நபர்களால் சந்தோசமான தகவல்கள் வந்துசேரலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




அச்சுறுத்தலாக தோன்றிய தகவல்கள் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், வியாபார விரோதம் விலகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும்.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.




ஒரு சில வேலைகளை முடிக்க பல மணிநேரம் காத்திருக்க நேரிடலாம், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.




எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

இதுவரை முழுநிம்மதியோடு வாழ்ந்தவர்கள் யாருமிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் எதிர்காலத்தினை வகுப்பதற்கான தருணம் இதுவே

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**தென்னிலங்கை அரசாங்கம் பாரிய பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கும் இந்தச் சூழலை தமிழ் மக்களின் விடிவுக்காக பயன்படுத்துவதற்கு அனைத்து தமிழ் தலைமைகளும் தலைப்பட வேண்டியது தவிர்க்க முடியாத விடயமென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழல் சுமூகமாகும் வரையில் தமிழ்த் தரப்பு அமைதியாக இருக்க வேண்டும் என்று கூறுவது பொருத்தமற்றதாகும். தற்போதைய சூழலை தமிழ்த் தரப்பு கையாள வேண்டும். முதலில் தற்போதைய நெருக்கடிகளின் மூலவேர் இனப்பிரச்சினை தான் என்பதை உறுதியாக வெளிப்படுத்த வேண்டும். அதனை தென்னிலங்கைச் சக்திகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். அதற்குரிய மூலோபாய அணுகுமுறைகளை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் தற்போது இலங்கைக்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்களை வழங்கும் வெளிநாடுகளில் இந்தியா முதன்மையானதாக உள்ளது. ஏற்கனவே தமிழர்கள் சார்பில் இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் தற்போது நெருக்கடியான காலத்தில் இந்திய மத்திய அரசிடம், ஈழத் தமிழர்களின் விவகாரத்தினை கையாள்வதற்காக அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுவதற்கான உந்துதலை தமிழ்த் தரப்புக்கள் கூட்டாக கோரிக்கை முன்வைக்க வேண்டும். இந்த விடயத்தினை தமிழ்த் தரப்பு தந்திரோபய ரீதியாக முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். உதவிகளை நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்குதல் என்ற தோற்றப்பாட்டுக்கு அப்பால் விடயத்தினை கையாள வேண்டும். இதற்கான தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து உரிய செயற்றிட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியுள்ளது. ஆனால், தமிழ்த் தரப்புக்கள் தற்போதைய நிலைமைகளை கையாள்வதற்கு தமக்குள் காணப்படுகின்ற தனிநபர் மற்றும் கட்சி அரசியல்களை கைவிட வேண்டியது அவசியமாகின்றது என தெரிவித்தார். (4-6-204)

# பணமோசடி கும்பல் தொடர்பில் மக்கள் அவதானம்

(கரணவாய்)

யாழ். மாவட்டத்தில் இனந்தெரியாத நபர்களால் தொலைபேசி அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் பணமோசடியில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சாதகமாகப் பயன்படுத்தி இவ்வாறான கும்பல் பணமோசடியில் ஈடுபட்டு வருகிறது.

நேற்று முன்தினமும் வடமராட்சிப் பகுதியில் இவ்வாறான சம்பவம் இடம் பெற்றுள்ளது.

எனவே பொது மக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-60)

# 15 பவுண் நகை திருட்டு இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியிடம் தங்க நகைகளை அபகரித்த இருவர் கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கடந்த 9 ஆம் திகதி கல்வியங்காடு - செம்மணி, ஆடிய பாதம் வீதியில் வைத்து வவுனியாவைச் சேர்ந்த தம்பதியிடம் தாலிக் கொடி, சங்கிலி என 15 பவுண் தங்க நகைகள் வழிப்பறிக்கொள்ளை செய்யப்பட்டன.

சம்பவம் தொடர்பில் அன்றைய தினமே கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் நாவற்குழியைச் சேர்ந்த 19 மற்றும் 22 வ்யதுடைய இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிட்ட நகைகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன. (4-6-33)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் நவரட்ணம் (காந்தி)

(காந்தி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

**அன்னை மடியில் 15.12.1950**

**இறைவன் அடியில் 18.06.2022**

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் வீதி முத்தமிழ் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நவரட்ணம் (காந்தி) அவர்கள் நேற்று (18.06.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று 10 மணிக்கு பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

(11917)

168/1, காரைநகர் வீதி,
முத்தமிழ் கோட்டை,
யாழ்ப்பாணம்.


077 943 4646
070 643 4646

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அபிமன்யு

**ஒரு சிங்களவர் கூட வாழாத குருந்தூர் மலையில் சிவ சின்னங்களை மறைத்து பௌத்தத்தை திணித்து புத்தர் சிலையை நிறுவுவதற்கு முயற்சிப்பது ஏன்? எதற்கு? எப்படி?**



# நாட்டு மக்கள் பட்டினியில் வாட குருந்தூர் மலையில் பௌத்தம்

# ஏன்? எதற்கு? எப்படி?

ஒரு நாட்டின் மன்னன் அந்த நாட்டின் மக்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்பதை இவ்வாறு அறிந்து கொள்கிறான். தனது அரச களஞ்சியத்தில் தானியங்கள் இருக்கிறது. ஆகவே மக்களின் வீடுகளிலும் நிறைய தானியங்கள் இருக்கும்.

அரச கஜானாவில் பொன், பொருள் கொட்டிக் கிடக்கிறது. ஆகவே மக்களிடமும் பொன் பொருள் ஏராளமாய் இருக்கும். தனது அரண்மனை மாடமாளிகையாக காட்சி தருகிறது ஆகவே மக்களின் வீடுகளும் மாடமாளிகையாகவே இருக்கும், அரண்மனையின் பூந்தோட்டம் பூத்துக் குலுங்கிறது எனவே மக்களின் வீடு வாசல்களில் இவ்வாறே பசுமை பொங்கும் என கற்பனை செய்து கொண்டிருக்கிறான்.

ஆனால் அங்கு நடப்பதோ வேறாக இருந்தது. ஆம், நாட்டில் மழை இல்லை, அதனால் விதைப்புகள் நடைபெறவில்லை, விளைச்சல் இல்லை, மக்கள் பட்டினியால் வாடினர். நோய் நொடி அவர்களை கடுமையாய் தாக்கியது. அதனால் அவர்கள் இறந்து போனார்கள்.

இறுதி வரை அந்த மன்னனுக்கு நாட்டு மக்களின் அவல நிலை புரியவே இல்லை. இறுதிவரை மன்னன் தனது அரண்மனையை விட்டு வெளியே வரவே இல்லை. அதனால் அவனுக்கு நாட்டின் நிலையும் புரியவில்லை.

ஒரு நாள் எதிரி நாட்டு மன்னன் அவன் நாட்டின் மீது படையெடுத்தான். எதிரியின் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாத மன்னன் தப்பியோட முற்பட்டபோதே தனது நாடு செழிப்பிழந்து கிடப்பதை உணர்ந்து கொள்கின்றான். பலன் என்ன? தலைக்கு மேல்தான் வெள்ளம் வந்துவிட்டதே.

இது ஒரு கதையாக இருந்தாலும் எமது நாட்டிற்கும் பொருந்துவதாய் அமைகின்றது.

நாட்டில் மக்கள் பசி, பட்டினியால் உயிரை மாய்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். அத்தியாவசிப் பொருளான எரி பொருளுக்கு மக்கள் அல்லோல கல்லோலப் படுகின்றார்கள்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன் கூடும் மக்களின் வரிசை பல கிலோமீற்றர்களைத் தாண்டி அனுமன் வாலாய் நீண்டு செல்கின்றது.

வரிசை யுகத்தின் உயிரிழப்புகள் அதிகரிக்கத் தொடங்கி விட்டன. சர்வதேசமோ இந்த சர்வாதிகார அரசிருக்கும் வரை எம்மால் எந்த உதவியையும் செய்ய முடியாது என கைவிரித்து விட்டது.

ஆனாலும் இல்லை எமது பதவிக் காலம் முடியும் வரை நாம் பதவியில் இருப்போம் என்று அறிக்கைவிடுவதில் கவனம் செலுத்துகின்றனர் ஆட்சியாளர்கள். இவ்வாறு நாடே அழிவின் விளிம்பில் இருக்கும்போது பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளை கைவிடாமல் திணித்துக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களை என்ன வென்று கூறிவிட முடியும்.

ஆம், வரலாற்றுத் தொன்மை மிக்க முல்லைத்தீவு குருந்தூர் மலையில் பௌத்த விகாரை அமைத்து அதில் புத்தர் சிலை நிறுவும் செயற்றிட்டத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆட்சிபீடம் செயற்படுத்த திட்டம் தீட்டியிருந்த நிலையில் தமிழ் மக்களின் எதிர்ப்பினால் அச் செயற்றிட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

காலம் காலமாக தமிழர்களை பூர்வீகமாகக் கொண்ட குருந்தூர் மலையில் சிவ வழிபாடு இருந்ததற்கான சான்றுகளே ஏராளம் உண்டு. ஆயினும் தொல்லியத் திணைக் களம் இப்பிரதேசம் பௌத்தத்திற்குரியது என்று அடையாளமிட்டு அங்கு பௌத்த விகாரையை நிறுவ முற்படுவது எந்த வகையில் நியாயமானது?

ஒரு சிங்களவர் கூட வாழாதா குருந்தூர் மலை எவ்வாறு பௌத்தத்திற்கு சொந்தமாகும் என்ற அடிப்படையைக் கூட விளங்கிக் கொள்ளாதவர்கள் ஆட்சி அதிகாரங்களில் இருக்கும் வரை இன-மத பேதங்கள் எழுந்து கொண்டே தான் இருக்கும்.

ஒரு மதத்தை பின்பற்ற இங்கு சட்டங்கள் இடம் கொடுத்தாலும் அடாத்தாய்

**“அபிவிருத்தி அடைந்துவரும் நாடொன்று சர்வதேசத்துடன் பகைத்துக் கொண்டால் அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதற்கு இலங்கைத் திருநாடு மிகச் சிறந்த உதாரணமாகிறது.”**

இவ்வாறு குறிப்பிட்ட ஒரு மதத்தின் திணிப்பை இந்த நாட்டில் வாழும் எவரும் ஏற்கமாட்டார் என்பது தெளிவு.

ஆனாலும், ஆட்சியாளர்கள் இவ்வாறு செய்வதன் நோக்கம் என்ன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதனூடாக இனங்களுக்கிடையிலான பாகுபாட்டை வளர்த்து தமது சுயநல அரசியலை வளர்த்துக் கொள்ளும் குறுகிய சிந்தனையை இது எடுத்துக் காட்டுகின்றது.

மனிதனுக்குத் தேவையான உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் நாட்டு மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் குருந்தூர் மலையில் அவசர அவசரமாக புத்தர் சிலையை நிறுவுவதன் நோக்கம் தான் என்ன? அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாடு சர்வதேசத்துடன் பகைத்துக் கொண்டால் எவ்வாறு அதன் விளைவு இருக்கும் என்பதற்கு இலங்கைத் திருநாடு ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்ந்துள்ளது. இதை ஆட்சியா ளர்கள் புரிந்து கொண்டு தமது சுயநல அரசியல் இலாபங்க ளைத் தவிர்த்து மக்களுக்காக, மக்கள் சேவையைச் செய்வதே சிறந்த செயலாகும்.

இல்லையேல் அந் நாட்டு அரசனுக்கு ஏற்பட்ட நிலையே இவர்களுக்கும் ஏற்படும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

எங்க இன்னமும் கங்காணியாரைக் காணவில்ல மூப்பர் விசாரித்தார்.

ஓ! இப்ப பெற்றோலுக்கு வரிசை. மண்ணெண்ணெய்க்கு வரிசை என்டால் என்ன செய்யிறது.

விதானையார் விஸ்வலிங்கம் விளக்கம் கொடுத்தார்.

அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயன் ஆலடிக்கு வந்து சேர்ந்தார். இந்தா கங்காணியார் வந்திட்டார். பெற்றோலுக்கு வரிசையில் நின்றிருப்பார் போல. சோதிடர் சதாசிவம் சாத்திரம் சொன்னார்.

கங்காணி: நான் பெற்றோலுக்கு காத்து நிற்கல்ல. என்ர வீட்டுக்கு சோலர் பொருத்துவதற்கு மின்சார சபையினர் அனுமதி தந்தவியள்.

ஆனால் அவையள் தந்த நான்கு மாத காலமும் முடிஞ்சு போச்சு. இப்ப இருக்கிற பொருளாதார நெருக்கடியில சோலர் பொருத்துற நிறுவனங்கள் கோட்டேஷன் தரவில்லை.

நாளுக்கு நாள் டொலரின்ர பெறுமதி அதிகரித்துக் கொண்டு போகக்க அவையளும் என்னெண்டு தான் விலைக்கூறைத் தாறது.

இந்த நிலையில மின்சார சபையினர் தந்த நான்கு மாத காலம் முடிஞ்சு போச்சுது. இப்ப அந்த காலத்தைப் புதுப்பிப்பம் எண்டு அங்க போனன். அவ்வாறு காலத்தை புதுப்பிக்கிறதா இருந்தால் 6,500 ரூபாவை மின்சார சபைக்குக் கட்ட வேணுமாம்.

சிறாப்பர்: இதென்ன நாசமறுப்பு. நாட்டில நிலவுகிற பொருளாதார நெருக்கடியில- எந்தப் பொருளையும் இறக்குமதி செய்யேலாம இருக்கிற இந்த



## சோலருக்கு கால நீடிப்பு ரூ.6,500 கட்ட வேணுமாம்

நேரத்தில போய் 6,500 ரூபாயை கட்டச் சொல்லுறது எந்த வகையிலும் நியாயமில்லை.

கங்காணி: அதுமட்டுமோ சிறாப்பர். சோலர் பொருத்துவதற்கு 4 வீத வட்டியில வங்கி, கடன் கொடுத்த போது சோலர் பொருத்துவதற்கான அனுமதியை வடபகுதி மின்சார சபை வழங்கவில்லை.

அந்த 4 வீத வட்டிச் சலுகையில சிங்கள முஸ்லிம் மக்கள் தான் நன்மை அடைஞ்சவியள்.

இப்ப என்னவெண்டால், சோலருக்கான கடன் வட்டி 8 வீதத்தை கடந்த நிலையில சோலர் பொருத்துவதற்கு அனுமதி தந்திருக்கினம்.

ஆனால் சோலர் பனலை இறக்குமதி செய்ய முடியல்ல.

இந்த அவலமான கட்டத்தில தான் கால நீடிப்புக்கு 6500 ரூபாவை மின்சார சபை கட்டணமாக அறவிடுகிது.

பண்டிதர்: அநியாயம் கூடிப்போச்சு. அதிலும் தமிழர் பகுதிகளில தமிழ் அதிகாரிகள் அடிப்படை நியாயம் இல்லாமல் நடந்து கொள்ளுகினம்.

இந்தாப் பாருங்க, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துற நோக்கத்தில நிலையான வைப்புகளுக்கான வட்டியை 21 சதவீதம் வரை சில வங்கிகளுக்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியிருக்கு.

தென்பகுதியில 21 சதவீதத்தில ஏகப்பட்ட நிலையான வைப்புகள் வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் எங்கட வட பகுதியில 21 சதவீதத்தை வங்கி முகாமையாளர்கள் எவரும் நிலையான வைப்புக்கு வழங்கவில்லையாம்.

சாஸ்திரியார்: எங்கட தமிழ் அதிகாரிகள் தமிழ் மக்களுக்கு ஒரு போதும் நன்மை செய்யாயினம்.

மாறாக, அவையள் தங்கட தலைமை அலுவலகத்தில நல்ல பெயர் வாங்குவதற்காகத் தான் பாடுபடுவினம்.

வாத்தியார்: இப்படி பாடுபட்டு பின்னடி காலத்தில எதைச் சாதிக்க போகினம். நீங்கள் அறிஞ்சியளோ தெரியல்ல வடபிராந்திய போக்குவரத்து சபை சேர்த்து வைத்த 15 கோடி ரூபாவை அரசாங்கம் எடுத்திட்டுதாம்.

பஸ்வண்டிகளை ஒழுங்காகத் திருத்தாமல், ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்காமல் அவர்களைக் கசக்கிப் பிழிஞ்சு சேர்த்த பணம் எப்படிப் போச்சுது எண்டு பார்த்தியளோ... இப்படித்தான் எல்லாம் நடக்கும்.

மூப்பர்: நீங்கள் இதைச் சொல்லுறியள். கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் இது.

யாழ்ப்பாணத்தில எரிபொருள் நிலையங்களில பொலிஸாருக்கு பெற்றோல் வழங்குறதில முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இந்த முன்னுரிமையை பயன்படுத்தி சில பொலிஸார் தங்களுக்குத் தெரிந்தவர்களின்ட மோட்டார் சைக்கிள்களுக்கு பெற்றோல் அடிச்சுக் கொடுக்க, அவர்களும் கைமாறு செய்தவியளாம்.

விதானையார்: இப்ப லஞ்சம் ஊழல் தலை விரித்தாடுது.

அண்மையில நல்லூரில நடந்த ஒரு விபத்தில பெண் அரச ஓய்வூதியர் ஒருவர் அந்த இடத்திலேயே இறந்து போனார். ஆனால் அந்த விபத்தோட சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரை பொலிஸார் கைது செய்யவேயில்லை எண்டால், அதுக்குள்ள என்ன நடந்திருக்கும் எண்டு நீங்கள் யோசிச்சுப் பாருங்களன்.

பண்டிதர்: அப்ப இறந்தவர் தனியாளோ!

விதானையார்: ஏன் பண்டிதர் அப்படி கேட்கிறியள்?

பண்டிதர்: இல்லையென்டால், அவற்ற உறவுகள் கெம்பி எழுந்திருப்பினம். அதோட பொலிஸார் சம்பந்தப்பட்டவரைக் கைது செய்திருப்பினம்.

விதானையார்: என்ன செய்யிறது விபத்தில ஓர் உயிர் பலியான போதிலும் அந்த விபத்தோட சம்பந்தபட்டவரை பொலிஸார் கைது செய்யல்ல எனும் போது இந்த நாட்டில சமத்துவமான நீதி இல்லை என்பது தெரியுதல்லோ பெருமூச்சு விட்டவாறு விதானையார் கூற,

அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழு... வாழ விடு!

தேடித் திரிதலின் அர்த்தம் "தேவை" என்று தேடித் தோற்ற ஒருவன் சொன்னான்..., மனதின் தேடலே மாற்றத் தின் வித்துக்கள். ஆர்ப்பரிக்கும் நேரமதில் அலைமோதும் மக்கள் திரள்கள், எண் ணிலடங்கா பொழுதுபோக்கு துறைகள் அதில் தன் விரல்களை பதிக்க துடிக்கும் எத்தனையோ திரையிட்ட முகங்கள். **Facebook, instagram, share chat, twitter...** என பல செயலிகள் அதில் திறமைகளின் தேடல்களில் தொடங்கி பாராட்டு, அங்கீகாரம், மதிப்பு, அன்பு என பலவாறு தேடல்கள் விரிந்து கொண்டே செல்கிறது. நவ நாகரீக உலகில் கருத்துக்களை பதிவிட மட்டுமல்ல, சுதந்திரமாய் தன் கருத்து களை பகிரவும் பொதுவெளி ஒன்றை உருவாக் கியுள்ளது இந்த செயலிகள்.

என் திறமை, எனக்கென்று ஒரு அங்கீகாரம், எனக்கான மேடை, என் விசிறிகள் என்ற கர்வத்தையும் தருகிறது. தலைமுறைகள் பலவாய் அங்கீகாரமற்று தனக்குள் புதைக்கப்பட்ட திறமைகள் ஒவ்வொன்றையும் திரையிட்டு உலகுக்கு காட்டும் சாளரமாய் விளங்குகிறது இச்செயலிகள்.

எங்கோ ஒரு மூலையில் இருக்கும் நபர் முதல் எதிர்வீட்டில் இருக்கும் முகமறியா நண்பர் வரை அத்தனை பேரும் தனக்கென்று தன் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் பொதுவெளியில், கருத்துகளை பதிவிடுகையிலும் அக்கருத்துகளை ஆராய்ந்து விமர்சிப்பதிலும் சற்றே கவனம் தேவை.

உலகமே உங்கள் மேடை எனில் அதில் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அத்தனை பேரும் அதன் அங்கத்தினர், ரசிகர்கள் மற்றும் விமர்சகர்கள்.


முகத்திரையிட்டு யாரோ கூட்டத்தில் ஒரு வராய் வீசியெறியும் உங்கள் விமர்சனங்களையும்



பதிவுகளையும் அவரவர் முகத்திற்கு நேரே ஒரு முறையேனும் கூற முடியுமெனில் அது நியாயாமாய் இருக்கும். அரங்கம் நிறைந்த அவையில் நிற்கும் ஒருவனின் சொல்லும் செயலும் தான் அவனின் திறமையையும் தன்மையையும் தீர்மானிக்கும்.

பொழுது போக்கு செயலிகள் மற்றும் தளங்கள் என நாம் நினைக்கும் ஒவ்வொன்றும் ஒரு அரங்கம் நிறைந்த அவை, அதில் நிற்கும் ஒவ்வொருவரும் நாம் என்ற நினைவோடு பதிவுகளை பதிவிடுவதும் விமர்சனம் பதிவிடுவதும் இருக்குமாயின் இந்த தொழில் நுட்ப செயலிகளைக் கண்டு எங்கோ ஒரு மூலையில் தன் திறமைகளை வெளிப்படுத்த வழி இருந்தும் விமர்சனங்களின் வீண் அச்சத்தால் அதை தன்னுள் புதைக்கும் நிலை எவர்க்கும் வராது.

வாய்ப்புகளை எட்டத் துடித்து எண்ணற்ற கனவுகளோடு வரும் பலரை வாழ்க்கையை வெறுக்கும் நிலைக்குத் தள்ளுதல் பாவத்தின் உச்சம். பிறருக்கு உதவாவிடினும் அவர் களை உந்தித் தள்ளாதீர்கள், அவர்களும் வாழ்ந்துவிட்டு போகட்டும்.... வாழ்க்கை எல்லாரும் வாழ்வதற்குத் தானே...



# புற்றுநோய்க்கு மருந்து

**புற்றுநோயை மருந்துகளால் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வெளிச்சத்தைக் கொடுத்திருக்கிறது இந்த மருந்து. இது இன்னும் பல புதிய வழிகளை உருவாக்கக்கூடும்**

'புற்றுநோய் குணப்படுத்தவே முடியாதது என்கிற சித்தரிப்பை முதலில் மாற்ற வேண்டும்' என்பார்கள் மருத்துவர்கள். ஆம், மலக்குடல் புற்றுநோய்க்கு மருத்துவர்கள் தீர்வு கண்டுபிடித்திருக்கிறார்கள். அறுவைச்சிகிச்சை, கீமோதெரபி, கதிர்வீச்சு சிகிச்சை போன்ற வலிகளும் வாதைகளும் நிறைந்த நடைமுறைகள் இல்லாமல், வெறுமனே மருந்து கொடுத்து ஒரு புற்றுநோயைக் குணப்படுத்தியுள்ளார்கள்.

இப்படி மருந்தின் மூலமாக நோயாளிகள் பூரண குணமடைந்திருக்கிறார்கள் என்பதால்தான் இது உலகின் தலைப்புச்செய்தி ஆகியிருக்கிறது. இந்த சோதனைக்கு **GlaxoSmithKline** நிறுவனம் உதவியிருக்கிறது. இன்னும் பெரிய அளவில் இதுகுறித்த ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்கிறபோதிலும், மலக்குடல் புற்றுநோயிலிருந்து பூரணமாகக் குணமடைந்த 12 பேரும் கண்ணீர் மல்க நன்றி தெரிவிக்கிறார்கள். ஒவ்வொரு மூன்று வாரத்துக்கும் ஒரு டோஸ் என ஆறு மாத காலத்துக்கு டோஸ்டார்லிமாப் என்கிற மருந்து இந்த நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவே இந்த மாயத்தைச் செய்திருக்கிறது.

முழுமையாகக் குணப்படுத்த முடியாத ஒரு நோய் புற்றுநோய். மேற்கத்திய நாடுகளில் 10 இல் 7 பேர் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டுதான் புற்றுநோயுடன் போராடிவருகிறார்கள்.

மலக்குடல் புற்றுநோயாளிகளுக்கான சிகிச்சை மிகவும் கடுமையானது. அதிலும் இரண்டாம் கட்டத்திலோ, மூன்றாம் கட்டத்திலோ நோய் கண்டறியப்பட்டால் கீமோதெரபி, கதிர்வீச்சு சிகிச்சை, அறுவை சிகிச்சை என வாழ்க்கையே முற்றிலுமாய் மாறிவிடும். சிகிச்சை எடுத்துக்கொண்டாலும், 20 முதல் 30% நோயாளிகளுக்கு புற்றுநோய் மீண்டும் வரும் அபாயம் இருக்கவே செய்கிறது. இந்தச் சிகிச்சையின் பின்விளைவுகளும் மோசமானவை. குடல் மற்றும் சிறுநீரகம் இயல்பாகச் செயல்படாமல் போகலாம். மலட்டுத்தன்மை ஏற்படலாம். பாலியல் ரீதியிலான செயல்களில் நிரந்தரமான பாதிப்புகள் உண்டாகும். அதே சமயம், இத்தகைய சிகிச்சைகளின் முடிவில் புற்றுநோய் முற்றிலுமாய் உடலை விட்டு நீங்கியிருக்காது என்பதுதான் பெருந்துயரம்.

ஆனால், இப்போது குணமடைந்த 12 பேரும் நிம்மதியாக இருக்கிறார்கள். எல்லா சோதனைகளும் செய்து பார்த்ததில், இவர்களின் உடலில் புற்றுநோய் செல்கள் இல்லை என்பதே அந்த நிம்மதிக்கான காரணம். சிகிச்சை முடிந்து ஒருவருடத்துக்குப் பின்னர் அந்த 12 பேருக்கும் எந்தவிதமான கூடுதல் சிகிச்சையும் தேவைப்படவில்லை. யாருக்கும் புற்றுநோய் செல்கள் மீண்டும் உருவாகவில்லை. யாரும் புற்றுநோயின் மூன்றாவது கட்டத்துக்குச் செல்லவில்லை.

இந்த மருந்தின் மூலம் குணமான முதல் நபராக சாச்சா ரோத் அறியப்படுகிறார். 38 வயதான சாச்சாவுக்கு மலக்குடலில் சில சமயம் இரத்தக்கசிவு ஏற்பட்டிருக்கிறது. சாச்சாவை சோதனை செய்த மருத்துவர், அவருக்குப் புற்று நோய் இருப்பதை உறுதி செய்தார். கீமோதெரபி சிகிச்சைக்குச் செல்ல முடிவெடுத்தார் சாச்சா. ஆனால், இவருக்கு வந்திருக்கும் புற்றுநோய்க்கு கீமோதெரபி பயனளிக்காது என மருத்துவர் நிராகரித்தார். இப்படியாக டோஸ்டார்லிமாப் சோதனைக்கான வாய்ப்பு சாச்சாவுக்குக் கிடைத்தது. இந்தச் சிகிச்சையின்மீது பெரிய நம்பிக்கை இல்லாமல்தான் சாச்சா, தன்னைப் பரிசோதனை எலியாக மாற்றிக்கொண்டார். இந்த சோதனை முடிந்ததும் மற்ற சிகிச்சை முறைகளைத் தேடவும் ஆயத்தமானார். ஆனால், அவரே ஆச்சரியப்படும் விதமாக அவர் குணமடைந்தார். டோஸ்டார் லிமாப் சிகிச்சை முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்றளவிலும் சாச்சாவுக்குப் புற்றுநோய்க்கான எந்தவிதமான அறிகுறியும் இல்லை. டோஸ்டார்லிமாப் என்பது புதியதொரு மருந்து கிடையாது. அது ஏற்கெனவே கர்ப்பப்பைப் புற்றுநோய் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த ஒன்றுதான். புற்றுநோய் செல்களைக் கண்டறிந்து அழிக்கும் வேலையை உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பிடம் விட்டுவிடுகிறது இந்த மருந்து.

அதே சமயம், இது வெறும் 12 பேரிடம் மட்டுமே செய்யப்பட்ட ஒரு சிறிய மருத்துவ சோதனை.. பலமுறை சோதனை செய்தாலும், இதே மாதிரியான முடிவுகள் வருகின்றனவா என சரிபார்த்தல் அவசியம் என மருத்துவர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

'புற்றுநோயை மருந்துகளால் குணப்படுத்த முடியும்' என்ற நம்பிக்கை வெளிச்சத்தைக் கொடுத்திருக்கிறது இந்த மருந்து. இது இன்னும் பல புதிய வழிகளை உருவாக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### பணத்தின் மதிப்பு

முத்தையா வட்டிக்கடை நடத்துபவன். தன்னிடம் கடன் வாங்க வந்தவர்களிடம் அன்புடன் பேசிப் பணம் கொடுப்பான். அதனால் அவன் கொடுத்த கடனும் சிரமமில்லாமல் அவனுக்குக் கிடைத்தும் வந்தது.

அவனிடம் கடன் வாங்க வருவோரின் எண்ணிக்கை பெருகவே அவன் தன் உதவியாளர்களாக நால்வரை நியமித்துக் கொண்டான். அவனது கடை நன்கு நடந்து வந்தது. இதைக் கண்ட அருணாசலம் என்பவன் மனதில் தானும் முத்தையாவைப் போல வட்டிக் கடை நடத்திப் பெயர்பெற வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அதற்கு என்ன செய்யலாம் என்று அவன் யோசிக்கலானான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. முத்தையா நூற்றுக்கு ஆண்டிற்கு பதினைந்து என்று வட்டி வாங்கி வந்தான். தான் நூற்றுக்கு ஏழரை என்று வட்டி வாங்கினால் தன் வியாபாரம் அமோகமாக நடக்கும் என்று அவன் எண்ணினான்.

அருணாசலம் தான் புதிதாக வட்டிக்கடை வைக்கப் போவது பற்றித் தன் மனைவியிடம் கூறினான். அவள் அவனை விட புத்திசாலி. அவள் சற்று யோசித்து விட்டு "நீங்கள் அவசரப்பட்டு யாருக்கும் கடன் கொடுத்து விடாதீர்கள். அது லேசில் திரும்பி வராது. நமக்குப் பண நட்டமே ஏற்படும். முத்தையாவின் வட்டி அதிகமாக இருந்தும் கடன் வாங்கிப் போவோரின் எண்ணிக்கை குறையவில்லை. மேலும் அவர் கொடுத்த எல்லாக் கடனும் விரைவில் வசூலாகி விடுகிறது? நீங்கள் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்தால் எல்லோரும் வாங்கிக் கொண்டு போய் விடுவார்கள். ஆனால் பணம் லேசில் திரும்பி வராது. இதனால் நமக்குப் பண நட்டத்தோடு முத்தையாவின் மனஸ்தாபத்திற்கும் ஆளாக வேண்டி வரும்". அவர் நமக்கு தூரத்து உறவினரும் ஆவார். மிகவும் நல்லவர். "நீங்கள் புதுக் கடை ஆரம்பிக்கப் போவது பற்றி அவரிடம் யோசனை கேளுங்கள். கண்டிப்பாக உங்களுக்கு அவர் ஏதாவது ஒரு வழி சொல்லுவார்" என்றாள். அருணாசலமும் தன் மனைவி கூறியபடி முத்தையாவைச் சந்தித்து தான் வட்டிக் கடை வைக்கப் போவது பற்றி விபரமாகக் கூறினான்.

முத்தையாவும் முழுவதையும் கேட்டு விட்டு "நீ என்னிடம் வந்தது நல்லதாய்ப் போயிற்று. வட்டிக் கடையை யார் வேண்டுமானாலும் நடத்தி விட முடியாது. இது கத்தி முனையில் நடப்பது போல, அதன் நெளிவு சுளிவுகளை நான் நன்கு அறிவேன். நானே என் வியாபாரத்தை விரிவுபடுத்த எண்ணி இருக்கிறேன். அதற்கு எனக்குப் பணம் தேவைப்படுகிறது.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




இராவணன் போருக்குப் பின்வாங்கவில்லை; இருதரத்தவரும் கைகலக்கக் காத்திருந்தனர்; எனினும், முடிந்தால் கைகுலுக்க இராமன் முயற்சி எடுத்துக் கொண்டான். இது தனிப்பட்ட ஒருவனோடு தொடுக்கும் போர் அன்று; ஓர் அரசன் மற்றொரு அரசன் மேல் எடுக்கும் படை எடுப்பு, "தூதுவன் ஒருவனை அனுப்பிச் சீதையை விடுவது பற்றிப் பேசி வெற்றி காண வேண்டும்" என்று விழைந்தான்.

முரசு அறைந்து உரசு போரைத் தொடரும் அறிவு அறை போகிய நெறி தவறிய காவலனுக்கு நீதி கூற விரும்பினான்; சொல்லின் செல்வன் அனுமன் வெல்லும் திறமை உடையவன் என்றாலும், அவனைத் தூது அனுப்பாமல் அரச மகன் அங்கதனை அனுப்பிப் புதுமை தோற்றுவிக்க விரும்பினான்; "அனுமனைத் தவிர வேறொரு ஆள் இல்லை; அவனே திரும்பி வருகிறான்; என்று பகைவர் குறைவாய் எடை போடக்கூடும்" என்பதால் ஆள் மாற்றத்தைச் செய்ய விரும்பினான்; வாலி மைந்தன் என்பதால் அவனுக்கு ஒரு தனி தகவு இருந்தது; அறிமுகமானவன் என்பதால் அதிகம் பேசத் தேவை இராது; இராவணனுடன் பேசுவதற்கும் தடைநேராது. வருகை தந்த தூதுவனுக்கு வரவேற்புத் தரப்பட்டது; அங்கதன் தந்தையைக் கொன்றவனுக்கு வக்காளத்து வாங்க வந்திருப்பது இராவணனுக்கு வியப்பைத் தந்தது. "தந்தையைக் கொன்றவனுக்கு ஆதரவு தேட வந்திருக்கிறாய்? இது விசித்திரமானது" என்றான். "வாலி ஆட்சிக்குச் சுக்கிரீவன் வேலி போட்டுக் கொண்டான்; அதனை நீ கோலினால் உனக்கு வாங்கித் தருகிறேன்" என்றான். "சிங்கம், நாய் தரக் கொள்ளுமோ நல்லரசு? நீ தரும் ஆட்சியை நேர் என்று நான் கொள்ளேன்; நான் ஆட்சிக்கு வரவில்லை; இராமன் இல்லற மாட்சிக்கு வழி கோலவே வந்தேன்" என்றான்.


"சீதையைச் சிறை விடு செய்; அக் கோதையை இராமனிடம் சேர்த்து விடு; தையலை விட்டு அவன் சரணம் தாழ்க". "இரா மன் தாரத்தை விடு; அன்றிப் போர்க் களத்தில் உன் வீரத்தைக் காட்டு; ஓரம் கட்டி ஒதுங்கி நில்லாதே" என்றான்.

ஓர்ந்து பார்த்து முடிவைத் தேர்ந்து சொல்வதற்கு மாறாய் "அவனைப் பற்றிக் கொணர்க" என்று ஆணை இட்டான்; அவன் வீரர் ஏவல் கேட்டுப் பாய்தற்கு முன், அவன் காவல் நீங்கிக் காற்றின் வந்து காகுத்தனை வணங்கி நின்றான்.

**முதற்போர்**

அணிவகுத்துறப் படைகள் தம் பணியைச் செய்யத் தொடங்கின; பார்வேந்தர் இருவரும் களத்தில் நேருக்கு நேர் சந்தித்தனர்; வெட்டி மடியும் போரிலும் ஓர் வியப்பினைக் காண முடிந்தது; இராமன் அம்பு இராவணன் மணிமுடியைத் தட்டிப் பறித்துத் தூர எறிந்தது; அது கடலுள் சென்று விழுந்தது; தொடை நடுங்கிய பகைப்படைவீரர் இடம் தெரியாமல் மறைந்தனர்; சிதறி ஓடினர்; பக்கத் துணையின்றி, இராமகாளை முன் தனித்துப் போராடிக் களைத்து இராவணன் தான் வாளும் இழந்தான்; வாழ் நாள் இழக்கும் நிலையையும் அடைந்தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடவுள் இல்லை என்று சொல்பவர்கள் இன்றும் இருக்கிறார்களே வியாசரே?






எரிபொருள் நிரப்பு நிரையில் நின்ற அனுபவம் உண்டோ வியாசரே?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**நாட்டின் இப்போதைய நிலைக்கு யார் காரணம் வியாசரே?**

நீங்களும் நானும் என்பதே உண்மையானது.

ஆம், நல்லவர்கள் யார், கெட்டவர்கள் யார் என்ற பிரித்தறிவு கூட இல்லாமல் பொய் வசனங்கள் பேசியவர்களுக்கு வாக்களித்தவர்கள் நாங்கள் தானே.

அதனால் இந்த இக்காட்டானகாலகட்டத்தை உருவாக்கியதன் பங்கு எமக்குத்தானே உண்டு.

இனி என்ன செய்வது நடந்தது நடந்து விட்டது இனியாவது நல்லவர்கள் யார் திருடர்கள் யார் என்பதை புரிந்து செயற்படு.

**தக்ஷிகன் — வதிரி**

**அரசியல் இலாபங்களுக்காக ஆட்சியாளர்கள் செயற்பட்டால் நிலை என்ன?**

வரிசை நீண்டு செல்லும். மக்கள் மனங்களில் விரக்தி பீறிட்டெழும். கோபம் உச்சத்தைத் தொடும்.

எந்திரன் திரைப்படத்தில் பல எந்திரன்கள் ஒன்று சேர்ந்து நாட்டையே அழிப்பது போல மனித எந்திரங்கள் நாட்டை அழித்து நொருக்கி சுக்குநூறாக்கும்.

அதன்பின் கைது என்ற பூச்சாண்டிகளுக்கு அவர்கள் பயப்பிட மாட்டார்கள். நல்லவர்கள் மட்டும் வாழும் நாடாக மாறும் வரை அழிவுகளை யாராலும் தடுத்துவிட முடியாது.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**யாரோ ஒருவன் — யாழ்ப்பாணம்**

**பாசம் வைப்பதே பாவம் ஆனதே... என்று பாடும் நிலையில் நான் இங்கு?**

ஒருவர்: டேய் நானும் பல நாட்களாகப் பார்க்கிறேன் நீ அந்தப் பெண்ணின் பின்னால் சுற்றுகிறாய். என்ன அந்தப் பெண்ணைக் காதலிக்கிறாயா?

மற்றவர்: ஒரு பெண்ணின் பின் ஆண் திரிந்தால் அதற்கு காதல் என்ற அர்த்தம் மட்டும் தான் இருக்க வேண்டுமா?

ஒருவர்: அப்படியென்றால்?

மற்றவர்: ஏன் அந்தப் பெண்ணின் கழுத்தில் இருக்கும் இரண்டரைப் பவுண் சங்கிலிக்காக இருக்கக் கூடாதா?

**அருள்வாணன் — யாழ்ப்பாணம்**

**எரிபொருள் நிரப்பு நிரையில் நின்ற அனுபவம் உண்டோ வியாசரே?**

நின்றேன், கண்டேன், மனிதத்தையும் கண்டேன், மனிதாபிமானத்தையும் கண்டேன், அநியாயத்தையும் கண்டேன், அராஜகத்தையும் கண்டேன்.

வரிசை நீண்டு செல்ல தார் வீதிகளில் கொழுத்தும் வெயிலில் தலைக் கவசத்துடன் நிற்கும் கொடுமை சாதாரணமானதல்ல. அந்த கொடும் வலி பிறர் மேல் கோபத்தையே கொட்டிவிடுகிறது.

இவை தவிர கர்ப்பிணித் தாய்மார் எனின் வரிசையைத் தவிர்த்து முன்சென்று எரிபொருள் நிரப்ப வழி செய்கிறார்கள்.

வரிசை யுகத்தில் அன்பும் உண்டு ஆத்திரமும் உண்டு அவ்வளவே.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**தேவன் — சாவகச்சேரி**

**கடவுள் இல்லை என்று சொல்பவர்கள் இன்றும் இருக்கிறார்களே வியாசரே?**

கடவுள் இல்லை என்பதை சர்வசாதாரணமாய் சொல்லிவிட முடியும்.

ஆனால், கடவுள் என்ற சக்தி உண்டு என்பதை சாதாரணமாய் சொல்லிவிட முடியாது.

அதை உணர்ந்தால் மட்டுமே கூறமுடியும்.

கடவுள் சிலைக்கு ஊற்றும் பாலை ஏழைகளுக்கு கொடுக்கலாம் என்பதே அவர்கள் வாதம்.

கடவுளும் அதைத்தான் விரும்பினார். என்ன செய்ய மனிதன் அதை மாற்றியமைத்து விட்டானே.

ஆனாலும் கடவுள் என்ற சக்தி உண்டு என்பதே நிதர்சனமானது.

**எக்ஸ்.வை.இசற் — யாழ்ப்பாணம்**

**காதல் வந்தால் கண் மண் தெரியாது என்பார்களே அது எப்படி?**

அன்பே ஆருயிரே, நீ இன்றி நானில்லையடி, உன் இதயம் துடிக்காது நின்று விட்டால் என் இதயம் இறந்துவிடும். உன் மூச்சுக் காற்றிலே நான் சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்.

நான் மாட மாளிகையில் வாழ்ந்தாலும் நீ வாழும் அந்தக் குடிசையே என் அரண்மனையடி.

அந்த அரண்மனையில் நான் ராஜா, நீ ராணி, எம் இராச்சியத்தில் அன்பு ஒன்றே அரசாட்சி செய்யும். அந்த அன்பு உனக்கானது உண்மையானது.

இதைப் படிக்கும் போது புரிகிறதா காதலுக்கு கண் மண் தெரியாது என்று.

**தேவகி — மானிப்பாய்**

**அரிசியில் உங்கள் பெயர் என்பதுபோல ஒரு துளி பெற்றோலிலும் உங்கள் பெயர் என்று மாறிவிட்டதே நிலை?**

இந்த நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பது புரியவே இல்லை. அத்தியாவசிய தேவையான எரிபொருளிற்கே இந்த நிலை எனின் இவர்களால் வேறு எதனைச் செய்துவிட முடியும்.

இந்தியா இலவசமாக எரிபொருளை வழங்குகின்றது என்கிறார்கள். பிறகு ஏன் எரிபொருளை இறக்க டொலர் இல்லை என்கிறார்கள் என்பது முரணான முரணே.

கடவுளே உனக்கே வெளிச்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

## வலி சொல்லும் தொடர்... 35

கடவுளுக்குக் களைப்பிருக்கவில்லை. கண்ணீரும் வரவில்லை. வீட்டின் பின் வளவிலிருந்த தேங்காய்கள் அனைத்தையும் ஓரிடத்தில் குவித்தான். அலவாங்கு, கத்தி, கோடரிகள் அனைத்தையும் பின் கிணற்றடியில் கொண்டுபோய் தொட்டியில் போட்டுக் கழுவினான். அவனது தலைக்கு மேல் அலைக்கழிந்தபடியிருந்த பின் வளவுத் தென்னங்காற்று, எதையோ ஊகித்துவிட்டதுபோல ஓலமிட்டது.

தேங்காய்கள் குவிக்கப்பட்ட இடத்துக்கு அருகில் அலவாங்குகளைக் கொண்டு வந்து வரிசையாகத் தரையில் குத்தினான். ஒரேயொரு தேங்காயை உரித்து, உடைத்து நீரை அண்ணாந்து வாயில் ஊற்றினான்.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. இருள் தனக்காக விலகிப் பாதை காட்டுவது போன்ற பேரொளி, தூரத்து வயல்களில் கோடுகளாய் தெரிந்தது.

ரக்கீன் கிராமத்தின் வயற்கரைக் கிராமத்தை பர்மிய பொலிஸார் முழுவதுமாக முற்றுகையிட்டிருந்தனர். சாம்பல் - கறுப்பு வண்ணச் சீருடைகளால் வயல் வரம்புகள் நிறைந்திருந்தன. நீண்ட வறண்ட ஒற்றையடிப் பாதை வழியாக உள்ளே ஒளிந்திருந்த முஸ்லிம் வட்டாரத்துக்குள் எண்ணுக்கணக்கற்ற கரும் பச்சை வாகனங்கள் நுழைந்திருந்தன.

அந்த வட்டாரத்தின் அத்தனை வீடுகளிலிருந்தவர்களும் தென்னஞ்சோலையொன்றுக்குள் இழுத்துச் சென்று, வரிசையாக இருத்தி வைக்கப்பட்டிருந்தனர். என்ன நடைபெறுகிறது என்று புரியாத பெண்கள் சிலர் குழறி அழுதார்கள். ஆண்கள் சிலர், கடவுளின் வீட்டுக்கு இழுத்துவரப்பட்டார்கள்.

கடவுளின் வீட்டுக்குப் பின்பக்கமாகக் குவித்துவைக்கப்பட்டிருந்த தேங்காய்களைச் சுற்றி, தரையில் இறுக்கியிருந்த அலவாங்குகளில், நான்கு தலைகள் குத்தப்பட்டிருந்தன.

கழுத்தோடு வெட்டிக் குத்தப்பட்டிருந்த தலைகளிலிருந்து வழிந்த இரத்தம், அலவாங்கில் வழிந்து தரையில் இறுகிப்போயிருந்தது. சுற்றிலும் மொய்த்துக்கொண்டிருந்த இலையான்களிடமிருந்து தப்புவதற்கு, அங்கு வந்திருந்த சீருடைக்காரர்கள் முகத்தை மூடியபடி நின்றனர்.

> **கழுத்தோடு வெட்டிக் குத்தப்பட்டிருந்த தலைகளிலிருந்து வழிந்த இரத்தம், அலவாங்கில் வழிந்து தரையில் இறுகிப்போயிருந்தது. சுற்றிலும் மொய்த்துக் கொண்டிருந்த இலையான்களிடமிருந்து தப்புவதற்கு, அங்கு வந்திருந்த சீருடைக்காரர்கள் முகத்தை மூடியபடி நின்றனர்.**

மரண விசாரணை அதிகாரி ஒருவர், உதவியாளர்களோடு வந்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். கடவுளின் வீட்டுக்குள்ளே சென்று, ஏதாவது தடயம் உள்ளதா என்று பொலிஸார் தேடிக்கொண்டிருந்தார்கள். இன்னொரு சீருடைக்காரர் முகக்கசவம் அணிந்தபடி ஓர் இடம் விடாமல் சகலத்தையும் புகைப்படமெடுத்துக் கொண்டிருந்தார்.

அந்த இயக்கத்தின் நான்கு தலைகளிலிருந்தும் வழிந்த இரத்தம், வெயிலில் நன்றாகக் காய்ந்து விட்டதை வைத்து, இந்தக் கொலைகள் எப்போது இடம் பெற்றிருக்கும் என்று மருத்துவர் கணக்கு போட்டுக் கொண்டிருந்தார்.

கடவுளின் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்ட அயலவர்கள் நால்வரை, அந்த வளவின் பின்பக்கமாகக் கொண்டு போய் நிலத்தில் போட்டு, விசாரிக்கத் தொடங்கியிருந்தார்கள் பொலிஸார். நிலத்தில் கிடந்தவர்களுடன் துப்பாக்கிப் பிடிகளும் சப்பாத்துக்களும் அதிகம் பேசிக் கொண்டிருக்க, எதுவுமே தெரியாத அவர்கள் சாக்குரலெடுத்துக் குழறியது. அந்தப் பண்ணை நிலம் முழுவதும் எதிரொலித்தது.

வரும்படிக்காக வாரிக்கொடுத்த தென்னங்காணியிடமிருந்து இரவோடு இரவாகப் பிரிந்த கடவுள், அன்றைக்கே தேங்காய் லொறியொன்றில் ஏறி பங்களாதேஷுக்குத் தப்பியோடினான்.

குடும்பத்தை இழந்த துயரினால் உறைந்திருந்த உடம்புக்குள், மூளை மாத்திரம் மிகத் தீவிரமாக இயங்கி, நான்கு கொலைகளை செய்து முடித்ததை கடவுளாலேயே நம்ப முடியவில்லை.

நெஞ்சில் ஆழப்பிளந்த ரணங்களின் மேல், ஏதோ ஒரு திருப்தி ஒட்டிக்கொண்டிருப்பதாக உணர்ந்தான்.

தன்னில் எஞ்சியிருந்த காலக்கழிவுகள் அனைத்தையும் கழற்றிவிட்டு, இந்தோனேசியாவுக்குப் பறந்த கடவுள், அங்கிருந்த அவுஸ்திரேலியா வந்து சேர்ந்தான்.



ஜூனியர் விகடன்

கடவுள் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர், அவன் பர்மிய அரசினால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டான். நான்கு பேர் கொலையில் தேடப்படுகின்ற முக்கிய நபராக, அவன் தொடர்பில் வெளியான பத்திரிகைச் செய்திகள், வழக்கம்போல அவுஸ்திரேலியப் புலனாய்வுத்துறையினரின் கைகளில் கிடைத்தபோது, கடவுளின் விதி கசங்கியது.

அவுஸ்திரேலியாவுக்கு அகதியாக வந்த காரணத்தைக் கேட்டபோது, கடவுள் ஒரு கதையைச் சொல்ல, அவுஸ்திரேலியப் புலனாய்வுத்துறையினர் பர்மிய பத்திரிகையை நீட்ட, சகலதும் சாம்பாராகிப் போனது.

விளைவாக, கடவுளும் நீதனைபோல நீண்டகால அகதியாக முத்திரை குத்தப்பட்டான். அதாவது, அவுஸ்திரேலியாவின் பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டான்.

ஏனைய அகதிளைப்போல, கடவுளுக்கும் மெல்போர்னிலுள்ள புலம்பெயர்ந்த பர்மிய இஸ்லாமிய மக்கள் முகாமுக்கு வந்து உதவி புரிவது வழக்கம். நல்ல நாள், பெருநாளென்றால், வெளியிலிருந்து உணவு கொண்டு வந்து தருவார்கள். அடிக்கடி வந்து பழகிய சில விருந்தினர்கள், அவ்வப்போது மாலை வேளைகளில் விருந்தினர் மண்டபத்துக்கு வந்திருந்து சில மணி நேரம் பேசிவிட்டுப்போவார்கள்.

எந்நேரமும் முகாமில் சக அகதிகளைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு, விருந்தினர்கள் வந்து கொஞ்ச நேரமாவது பேசிவிட்டுப்போவது அருமருந்து.

இவ்வாறு விருந்தினர்களாக வருபவர்கள், முகாம் வாசலில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் தாங்கள் சந்திக்க வருகின்ற அகதியின் பெயரையும், தங்களது விபரங்களையும் முன்பதிவு செய்ய வேண்டும்.

பாதுகாப்பு உத்தியோகத்தரகள், ரேடியோ வில் குறிப்பிட்ட முகாம் மண்டபத்துக்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்களுக்குத் தகவல் கொடுப்பார்கள். அந்த உத்தியோகத்தர், குறிப்பிட்ட அகதியை அழைத்து, அவருக்கு விருந்தினர் வந்திருக்கின்ற தகவலை அறிவிக்க, அவர் விருந்தினர் மண்டபத்துக்கு வந்து தனது விருந்தினரைச் சந்திக்கலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறறிவு மானுடரே!

சில காலம் முன்பாக அடுப்பு
சிதறியதால் நாடி நரம்பும்
பலமிழந்தே என்னை நாடாது
பயத்தால் ஓய்வு பெற்றேன்
எனக்காக இப்போ... மக்கள்
இரந்து நிற்பது போல் வரிசையில்
இறந்துந் தான் போகின்றனர்.
பரந்துபட்ட வீதிதனில் பாய்போட்டு
படுத்துறங்க எப்படித்தான் முடிகிறது
வெற்றாய்க் கிடந்தாலும் என்னை
வேண்டுமென்றே களவாடி
பொற்காசாய் பெறுவதும்
புதினத்தை என்னவென்பேன்.
ஆனால் ஒன்று
வடக்கில் அடுப்பு வகை எத்தனை தான்
வடிவமைத்தோம் முடக்கிய யுத்தத்தால்
விடிவெள்ளியாக விறகடுப்பு சூட்டடுப்பு
மண்ணெய் அடுப்பு மரத்தூள் அடுப்பு என
மரண பயத்துள்ளும் மன்னுயிர் காத்தீரே
உங்களுக்கு இப்போ எரிவாயு ஏன்?
குனிந்து வளைந்து வேலை செய மனம்
சுகசுவதாய் வாழ்வதனால் என் விலை
எகிறிப்போய் விட்டாலும் இனும் ஆவல்
இமயமாய் உயர்கிறதே ஏன் மானுடமே!
இயலாது பட்டினியைப் போக்குதற்குப்
பல சரக்கும் எட்டாத போதும் ஏன் அலைச்சல்
இப்படிக்கு, எரிவாயுச் சிலிண்டர்

வை.க.தவமணிதாசன்

# அந்தம் இல்லாப் பந்தம்

இன்று தந்தையர் தினம்



விந்தைமிகு இவ்வுலகில்
எந்தை இறை எமக்களித்த
சிந்தை எங்கும் நிறைந்திருக்கும்
பந்தம் அது தந்தையெல்லோ!

ஏந்த நிலைவந்திடினும்
நொந்திருக்கும் வேளையிலே
சொந்தமெனச் சோகம் கொய்யும்
தந்தையெனும் பேருறவு!

எந்தத் துன்பம் சூழ்ந்தாலும்
வந்ததுயர் மறைத்துவிட்டு
நந்தவனம் எனச் சிரிக்கும்
அந்தம் இல்லாப் பந்தம் அது

முந்திவரும் கண்ணீரை
சிந்திவிடவழியின்றி
சுந்தரமாய் எமைச் சுமக்கும்
சொந்தம் அதைப் போற்றிடுவோம்!

செல்வி-சண்முகராசா பாமகள்
தரம்-11
கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

# கனவுகளின் தேசம்

காலைப்பொழுதினிலே பற்பலகனவுகளுடன்
எனை மறந்து நானும் துயின்றிடும் வேளை
உன் பார்வை என் மீது
விழுந்திடும் பொழுதினிலே
எனையறியாது துடிதுடித்து உன் முகம்
காண எழுந்து ஓடோடி வந்தேன்.
உனை கண்ட பின் புது விடியலை
உணர்ந்து கொண்டேன்
நிதம் நிதம் உன் சுட்டெரிக்கும் பார்வையிலே
நான் மெழுகாய் உருகுகிறேன்
என் மன்னவனே!
உன்னாலோ என்னை விட்டு விலக முடியவில்லை
என்னாலோ உன்னைக் காணாது
இருக்க முடியவில்லை
நம் பயணமோ முடிவில்லா தொடர்கதையானதன்
விந்தை தான் என்னவோ?
எனக்கு மாலையிடும் மன்னவனுக்காய்
வரைந்ததாய் உணர்ந்திருப்பீர்கள் ஆனால்
தினம் தினம் காலையில் எல்லோரையும்
கொள்ளும் பகலவன் தான் அவர்.

ஆ.பாலமதுஜா
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

# மௌனத்தின் தேடல்- 564



## பரிதவிப்பு ஒழிந்திடனும்

பஞ்சம்- பசிக் கொடுமையால்
பாத்திரம் ஏந்தும் பாலகர்களுமோ
புவிதனில் இன்றோ இத்தனையாயினும்
பரிதாப இன்னல் நிலைமைக்குமோ
பொருளாதாரக் குறைபாடு நீங்கினால்
பாவிகள் பரிதவிப்பும் ஒழிந்திடாதோ?

தங்கத்தமிழன்
காரைநகர்.

## வாழ்க்கை

குறுக்கு வழிகாட்டும்
கொடிய தலைமுறையினரிடத்தில்
குற்றம் புரியாது
கூனிக் குறுகிக் கையேந்தும்
குழந்தைச் செல்வங்களே!
குழலூதிக் கூக்குரலிடு
குவலயமே அதிரும்படி- ஆனால்
உன் கையில் தான்
உனக்கான வாழ்க்கை
விடுதலை உள்ளது என்பதை மறவாதே!

ஜெ.ஜெனிஸ்
யாழ்/ஊர்காவற்றுறை
றோ.க.த.ஆ.பாடசாலை - தரம் - 02

## உணவுக்காய்

ஐம்பதாவது அறுபதாவது ஏன்
தொண்ணூறாவது பிறந்தநாள் என
வாழ்ந்து முடித்தவர்கள் கூட
பணத்தைக் கொட்டி
வீண்செலவு செய்யும் இவ்வுலகில்
வயிற்றில் பசியுடனும் கண்களில்
ஏக்கத்துடனும் தட்டேந்தி நிற்கின்றன
இவ்வுலகின் வருங்காலத் தூண்கள்
என்று தான் மாறுமோ இந்நிலை...

இ.இளமதி
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## சோறு வேண்டும்

கை நீட்டி லஞ்சம் வாங்கும்
கடன்கார உலகில்
தட்டேந்தித் தானம் கேட்கும்
தலையெழுத்தா உனக்கு?
தாய் வயிற்றில் தன்மானம்
இழக்காது சோறுண்டாய்
தாய் மண்ணில் தன்மானம்
இழந்து நிற்கின்றாய்
தன்மானம் தலைதூக்க
தாய் மண்ணோடு போராடு!
எந்நாளும் உன் கையால்
சோறுண்ண வேண்டுமென்று.

அருளப்பு ஞானப்பிரகாசம்
கருவில் வீதி, கரம்பொன்.

# மௌனத்தின் தேடல்- 565



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## ஒளியும் ஒலியும்

முன்னுரிமை அடிப்படையில்
சின்னஞ்சிறுவர்களுக்கு உணவென்று
உணர்வு பூர்வமாய்க் கூறினாலும்
இன்றுமிது கனவு தான்
வெள்ளித் தட்டும் கரண்டியும்
வெள்ளி போல் மின்னினாலும்
கண்களில் இல்லை ஒளி
எண்ணமும் நிறைவேறவில்லை
யானை வரும் பின்னே விரைந்து
மணியோசை வரும் முன்னே போல்
இங்குமிந்த அவலக்குரல் மிகுந்து
தங்கு தடையின்றி ஒலிக்கின்றது.


க.நாகராசா, நுணாவில்.

## பட்ஜெட் பாதி...

படைக்கு ஒதுக்கி அழித்த
பட்டோபகார நிதியதால்
பட்ஜெட் பாதி மேலே பணம்
பட்டு வாடா பண்ணி போர்
புரிந்த பின்பும் புத்தியிலார்
பெரும் படையை தமிழ் மண்ணை
அபகரிக்க வைத்ததேன்
அன்னை நிலம் மீளத்தாரின்
ஆட்சிமாறும் எம் கையிலே.

சாமிபுத்திரன்
சரவணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிகழ்ச்சியின் புரட்சி

# கடல் புறா

ஏன் தெரியுமா? கோட்டைத் தலைவனிடம் சொன்னதை உங்களிடமும் சொல்லுகின்றேன், கேளுங்கள்.

இந்த அக்ஷயமுனையில் எனக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் இதை அழித்து விடுவதாக அகூதா சபதம் செய்திருக்கிறார். என்னை அழிப்பது இந்தக் கோட்டையை அழிப்பதாகும். ஆனால் இந்த அழகிய கோட்டையையும் நகரத்தையும் அழிக்கும் விருப்பம் எனக்குமில்லை, அகூதாவுக்குமில்லை. அக்ஷய முனை பலப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

இங்கு எல்லோருக்கும் சுபிட்சத்தில் சம பங்கு வேண்டும் என்று நினைக்கிறோம். கோட்டைக்குள் மாட மாளிகைகளும் வெளியே குடிசைகளும் இருக்கக்கூடாது என்று எண்ணுகிறோம்.

இதைச் சொன்ன இளைய பல்லவன் அந்தக் கொள்ளைக் கூட்டத்தின் குடிசைகளையும் நோக்கி, கோட்டைக்குள்ளிருந்த பெரும் கட்டடங்களையும் நோக்கினான். அவன் பேச்சும் பார்வையும் அந்தக் கொள்ளைக்காரரிடை பெரும் சலசலப்பை உண்டாக்கின.

அதைத் தூண்ட இளையபல்லவன் மேலும் பேச்சைத் தொடர்ந்து, "நீங்கள் கடலோடுகிறீர்கள். உயிரைப்பணயம்வைத்துக்கொள்ளையடித்துச் செல்வத்தைக் கொண்டு வருகிறீர்கள். உங்களால் அதோ அந்தக் கோட்டை செழித்திருக்கிறது. நீங்கள் செழிக்கவில்லை, ஏன்?" என்று கேட்ட இளையபல்லவன் மீண்டும் அவர்களைக் கூர்ந்து நோக்கினான்.

பிறகு இகழ்ச்சிப் புன்முறுவல் செய்து கூறினான். " இருப்பினும் கோட்டைத் தலைவனை எதிர்க்க உங்களுக்கு அச்சமிருக்கிறது. காரணம் பல தந்திரங்களால் அவன் உங்கள் பணத்தைப் பறித்து விடுகிறான். உங்கள் வீரத் தலைவர்களை அப்புறப்படுத்தி விடுகிறான். அந்தப் பயத்தை நீக்கவும், இந்த அநீதியைத் தவிர்க்கவும் நான் இங்கு தங்கத் தீர்மானித்திருக்கிறேன். கோட்டைக்குள் அல்ல, உங்கள் குடிசைகளுக்கு நடுவில் எனது குடிலும் அமையும். இனி நாம் சகோதரர்.

ஆபத்திலும் சம்பத்திலும், கஷ்டத்திலும், நஷ்டத்திலும் சகோதரர்" என்று பெரும் உணர்ச்சியுடன் கூவிய இளையபல்லவன் தன் கரத்தை உயரத் தூக்கினான். அதே கணத்தில் அந்த மாலுமிகள், அவர்கள் துணைவிகள் அத்தனை பேர் கரங்களும் உயர்ந்தன! "ஆம், ஆம்," "சகோதரர், சகோதரர்!" என்று பலவிதக் கூச்சல்கள் வானைப் பிளந்தன.

அத்துடன் படகில் ஏற முற்பட்ட இளையபல்லவன் கடைசியாக அவர்களை நோக்கிச் சொன்னான். "இரவு நடன நிகழ்ச்சிக்கு நானும் வருகிறேன்," என்று இதைக் கேட்டதும் அந்தக் கூட்டத்தில் சட்டென்று கூச்சல் நின்றது. நிசப்தம் நிலவியது. அச்சம் அவர்கள் இதயங்களைக் கவ்விக் கொண்டதைக் கவனித்த இளைய பல்லவன், "அச்சத்தை விடுங்கள். உங்கள் அச்சம் எதிரிகளின் பலம், 'பதக்' குகளாயிருந்தாலென்ன, 'குளுஞ்' க்களாயிருந்தாலென்ன, அவர்களும் மனிதர்கள்தானே? என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நாமனைவரும் ஒரே கூட்டம், கொள்ளைக் கூட்டம் என்பது நினைவிருக்கட்டும். நம்மில் யாராவது ஒருவரைத் தொட்டதால் பலபேர் காவு ஆவது நிச்சயம். என் மாலுமிகளையும் இந்த நிகழ்ச்சிக்கு அழைத்து வருகிறேன் பயப்படாதீர்கள். இன்றிரவு நிகழ்ச்சி நீங்கள் இதுவரை காணாத புது நிகழ்ச்சியாயிருக்கும். புது சகாப்தமொன்று இன்று இந்த அக்ஷயமுனையில் உதயமாகும்" என்று சீறிய குரலில் கூறிவிட்டுப் படகிலேறினான் இளையபல்லவன். படகோட்டிகள் துடுப்புகளைத் துழாவினார்கள். படகு அவன் மரக்கலத்தை நோக்கி விரைந்து.

அதைப் பார்த்துக் கொண்டே அந்தக் கொள்ளைக்கூட்டம் நீர்க்கரையில் நீண்ட நேரம் நின்றிருந்தது. அதற்குப்பின் அவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் சென்ற இளையபல்லவன், தன் மரக்கலத்தைப் பெரும் சந்துஷ்டியுடன் அடைந்தான்.

அன்றைய நிகழ்ச்சிகள் அவனுக்குப் பெரும் ஆறுதலையளித்தன. பலவர்மன், மஞ்சளழகி, கடற்கரைக் கொள்ளைக் கூட்டம் இந்த மூன்று தரப்பட்ட பிரிவுகளை எண்ணிப் பார்த்து ஒவ்வொன்றையும் தான் ஓரளவு சமாளித்துக் கொண்டு வந்துவிட்டதை நினைத்து மன சாந்தி அடைந்தான்.

அன்றிரவு நடன நிகழ்ச்சியில் சொர்ணத் தீவின் பூர்வக்குடிகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கு தான் பரிகாரம் தேடிவிட்டதை எண்ணிப் பார்த்து மகிழ்ச்சியும் அடைந்தான். "நான் சொன்னதைக் கடற்படை மாலுமிகள் அவசியம் எண்ணிப் பார்ப்பார்கள்.

குறை எனும் விதையை அவர்கள் இதயத்தில் விதைத்திருக்கிறேன். இரவுக்குள் அது மரமாக வளரா விட்டாலும் கண்டிப்பாய்ச் செடியாகவாவது வளர்ந்துவிடும். தற்சமயம் இந்த மித்ரபேதம் போதும். கோட்டைத் தலைவனிடம் இவர்களுக்குள்ள அச்சத்தை அறுத்து அதிருப்தியை உண்டாக்கினாலே அக்ஷயமுனைப் பாதுகாப்பு இரண்டாகப் பிளக்கும். இடையே நான் நுழைவன்" என்று எண்ணமிட்டவாறே நூலேணியில் ஏறி மரக்கலத்தின் தளத்தில் காலை வைத்து இளையபல்லவனை அமீரும் கண்டியத்தேவனும் கையைப் பிடித்துத் தூக்கி விட்டார்கள்.

அப்படித் தன்னைத் தூக்கிவிட்ட அந்த இருவர் முகத்திலும் இருந்த வியப்புக் குறியைக் கண்ட கருணாகர பல்லவன் கேட்டான், "ஏன் நான் திரும்பி வந்தது வியப்பாயிருக்கிறதா உங்களுக்கு" என்று.

"அது மட்டுமல்ல வியப்புக்குக் காரணம். அந்தக் கொள்ளைக் கூட்டத்தார் உங்களிடம் நீண்ட நாட்கள் பழகியவர்களைப்போல் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்களே, அதுவும் விசித்திரமாயிருந்தது." என்றான் அமீர்.

கண்டியத்தேவனும் ஏதோ கேள்வி கேட்க முற்பட்டான். "கண்டியத்தேவரே! சூரியன் உச்சியை எட்டிவிட்டான். உணவருந்திக் கொண்டே பேசுவோம்," என்று அவன் கேள்வி பிறக்கு முன்னரே தடுத்துவிட்ட கருணாகர பல்லவன் தன் அறையை நோக்கி அந்த இருவரும் பின் தொடர நடந்தான்.

அறையில் மறு உடையணிந்து, அமீர், கண்டியத் தேவன், கூலவாணிகன் சேந்தன் முதலியோருடன் உணவருந்த உட்கார்ந்த இளைய பல்லவன் மிகவும் நிதானமாகவும் அவர்கள் மனத்தில் ஆழ்ந்து படியும் படியாகவும், தான் கப்பலிருந்து புறப்பட்டது முதல் நடந்த நிகழ்ச்சிகளை விவரித்தான். அவன் பேசுவதைச் சிறிதும் தடை செய்யாமல் கேட்டு வந்த அமீரும், மற்றோரும் உள்ள நிலையைத் தெள்ளெனப் புரிந்து கொண்டனர். இளையபல்லவன் எத்தனையோ சாமர்த்தியமாகக் காரியங்களைச் சாதித்திருந்தாலும் அந்தப் பயங்கரத் துறைமுகத்திலுள்ள ஆபத்து எல்லையற்றது என்பதையும் அன்றிரவு நிகழ்ச்சியும் அத்தனை சாமான்யமாகக் கடக்கக்கூடிய தல்லவென்பதையும் அவர்கள் புரிந்து கொண்டார்களாகையால் அவர்கள் முகங்களில் கவலை பெரிதும் தாண்டவமாடியது. அந்தக் கவலைக் குறியைக் கவனித்த இளைய பல்லவன் சொன்னான்: "அமீர்! மிகவும் பயங்கரமான அபூர்வகுடிகளும் கொள்ளைக் கூட்டமும் வஞ்சகத்தில் இணையற்ற ஒரு கோட்டைத் தலைவனும் உள்ள இடத்துக்கு நாம் வந்திருக்கிறோம்.

இருப்பினும் கலிங்கத்தின் கடலாதிக்கத்தை ஒழிக்க இதைவிடச் சிறந்த இடம் கிடையாது. சொர்ண பூமியின் இந்த அக்ஷயமுனை வடக்கு நோக்கித் தனது மூக்கை நீட்டிக்கொண்டு பாலூரிலிருந்து கடாரம் செல்லும் மரக்கலங்களை மோப்பம் பிடிப்பதுபோல் அமைந்திருக்கிறது. இது ஒன்றுதான் நமது இலட்சியத்துக்குத் தகுந்த தளம். ஆகவே இங்குள்ள ஆபத்தை நாம் சமாளித்துத்தான் ஆகவேண்டும். சரியான ராஜதந்திரத்தாலும் வீரத்தாலும் ஆகாத காரியங்கள் உலகில் எதுவும் கிடையாது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : வீட்ல விசேஷங்க
இயற்றியவர் : வைரமுத்து
இசை : இளையராஜா
பாடியவர் : கே.யே.யேசுதாஸ்



மலரே தென்றல் பாடும் கானம் இது
நிலவே உன்னை கூடும் வானம் இது

மலரே தென்றல் பாடும் கானம் இது
நிலவே உன்னை கூடும் வானம் இது

நிலம் இடம் மாறினாலும்
நிழல் நிறம் மாறினாலும்
நிலைபெறும் காதலென்னும்
நிஜம் நிறம் மாறிடாது
இறைவனின் தீர்ப்பு இது ஓ..
எவர் இதை மாற்றுவது
மலரே தென்றல் பாடும்
பூபாளம் கேட்கும் அதிகாலையும்
பூஞ்சோலை பூக்கும் இளமாலையும்
நீ அன்றி ஏது ஒரு ஞாபகம்
நீ பேசும் பேச்சு மணிவாசகம்
உள்ளம் எனும் வீடெங்கும்
உன்னழகை நான் தானே
சித்திரத்தை போல் என்றும்
ஒட்டி வைத்து பார்த்தேனே
எனைத் தழுவும் இளந்தளிரே
உனக்கென நான் வாழ்கிறேன்
மலரே தென்றல் பாடும்
நிலவே உன்னை கூடும் வானம் இது

காட்டாறு போல சில வேளையில்
காவேரி ஓடும் பல பாதையில்
ஆனாலும் ஓர் நாள் கடல் சேர்ந்திடும்
நாளான போதும் அது நேர்ந்திடும்
திக்குத் திசை தோன்றாமல்
வண்ணக்கிளி போனாலும்
தான் இருந்த கூட்டைத்தான்
தேடி வரும் எந்நாளும்
இருமனமும் ஒரு மனதாய்
இணைந்திடும் நாள் வாய்த்ததே
மலரே தென்றல் பாடும்

நிலம் இடம் மாறினாலும்
நிழல் நிறம் மாறினாலும்
நிலைபெறும் காதலென்னும்
நிஜம் நிறம் மாறிடாது
இறைவனின் தீர்ப்பு இது ஓ..
எவர் இதை மாற்றுவது
மலரே தென்றல் பாடும்

# என்ன நடக்கிறது?

# 100 நாட்களைக் கடந்த ரஷ்யா-உக்ரைன் போர்

ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கிடையேயான போர் 100 நாட்களைக் கடந்தும் வீரியம் குறையாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலக நாடுகள், ஐ.நாவின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காமல் ரஷ்ய ஜனாதிபதி புடின் விடாப்பிடியாக இந்தப் போரைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் விட்டுக்கொடுக்காமல் தனது நாட்டுப் படைகள் மூலம் பதிலடி கொடுத்து வருகிறார்.



அண்மையில் இந்தப் போரில் நடந்த சில முக்கியச் சம்பவங்கள் இங்கே...

**கிழக்கு உக்ரைனைக் குறிவைக்கும் ரஷ்யா!**

உக்ரைனின் லுஹான்ஸ்க் மாகாணத்திலுள்ள செவரோடொனட்ஸ்க் என்னும் நகரில், தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது ரஷ்யா. அங்கிருக்கும் குடியிருப்புக் கட்டடங்களைக் குறிவைத்து அழித்து வருகிறது ரஷ்ய இராணுவம். அந்தப் பகுதியிலுள்ள இரசாயன ஆலை ஒன்றில் நடத்தப்பட்ட தொடர் தாக்குதலில், ஆலையின் ஒரு பகுதியில் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாகவும் அந்த ஆலையிலுள்ள சுரங்கங்களில் சுமார் 800 பொதுமக்கள் சிக்கித் தவித்துக்கொண்டிருப்பதாகவும் உக்ரைன் அரசு தெரிவித்திருக்கிறது. இந்த நிலையில், ஜூன் 12 ஆம் திகதி அன்று, "இன்னும் சில வாரங்களில் உக்ரைனின் கிழக்குப் பகுதியை, ரஷ்யா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடும்" என்று எச்சரித்திருக்கின்றனர் அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள்.

**முற்றிலும் சேதமடைந்த தானியக் கிடங்கு!**

உக்ரைன் தலைநகர் கீவிலுள்ள தானியக் கிடங்கு ஒன்றில், வெடிகுண்டுத் தாக்குதலில் ஈடுபட்டது ரஷ்ய இராணுவம். அந்தத் தாக்குதலில் தானியக் கிடங்கு முழுவதுமாகச் சேதமடைந்திருக்கிறது. இது குறித்து உக்ரைன் வேளாண் துறை அமைச்சகம், "உக்ரைனின் மிகப்பெரிய கிடங்கான இந்த தானியக் கிடங்கில் சுமார் மூன்று இலட்சம் தொன் கோதுமை, சோளம் உள்ளிட்ட தானியங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. தற்போது இந்தக் கிடங்கு முற்றிலுமாகச் சேதமடைந்து விட்டது" என்று கூறியிருக்கிறது. உலகின் முன்னணி உணவு ஏற்றுமதி நாடாக இருக்கும் உக்ரைனில், மிகப்பெரிய தானியக் கிடங்கு முற்றிலும் சேதமடைந்திருப்பதால் வரும் வாரங்களில் உலகச் சந்தையில் உணவுப் பொருட்களின் விலை உயரும் என்று சொல்லப்படுகிறது. தங்களுக்கு ஆதரவளிக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கு நெருக்கடி கொடுக்கவே இதுபோன்று உணவுக் கிடங்குகளில், ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்துவதாக உக்ரைன் அரசு குற்றஞ்சாட்டியிருக்கிறது. ரஷ்யாவின் இந்தத் தாக்குதல்களால், நலிவடைந்த நாடுகளின் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விட்டதாக ஐ.நா. அறிக்கை வெளியிட்டிருக்கிறது!

**KH-22 ஏவுகணை... எச்சரிக்கும் இங்கிலாந்து!**

"ரஷ்யா, உக்ரைனின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்ற பயங்கர ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடும்" என எச்சரித்திருக்கிறது இங்கிலாந்து அரசு. இங்கிலாந்து பாதுகாப்பு அமைச்சகம் இது தொடர்பாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "5.5 தொன் எடையுள்ள KH-22 ரக ஏவுகணைகளை ரஷ்யா பயன்படுத்த வாய்ப்புகள் இருக்கின்றன. விமானம் தாங்கிக் கப்பல்களை அழிக்கும் சக்தி பெற்ற இந்த ஏவுகணைகளை ரஷ்யா பயன்படுத்தினால், மிகப்பெரிய உயிர்ச் சேதங்களும் சொத்து இழப்புகளும் ஏற்படும்" என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது!

**போரில் உயிரிழந்த 267 குழந்தைகள்!**

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் ஆலோசகர் ஒலெக்சி அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில், "போரின் முதல் 100 நாட்களில், சுமார் 10 ஆயிரம் உக்ரைன் வீரர்களை நாங்கள் இழந்திருக்கிறோம். அதே நேரத்தில் ரஷ்யப் படையில், சராசரியாக உக்ரைன் வீரர்களைவிட ஐந்து முதல் ஆறு மடங்கு வீரர்கள் உயிரிழந்திருக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறார். மேலும், உக்ரைன் அரசு வெளியிட்டிருக்கும் அண்மைய அறிக்கையில்,

"இந்தப் போரில் உக்ரைனைச் சேர்ந்த 287 குழந்தைகள் உயிரிழந்திருக்கிறார்கள். 754 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் தீவிர பாதிப்புகளைச் சந்தித்திருக்கிறார்கள். 1,848 கல்வி நிலையங்கள் உருக்குலைந்து போய் விட்டன" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஜூன் 9 அன்று ஐ.நா. சபை, 'இந்தப் போர் காரணமாக உக்ரைனில் 4,302 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். 5,217 பேர் காயமடைந்திருக்கின்றனர். மேலும், போரால் 72 இலட்சம் உக்ரைன் மக்கள் வசிப்பிடங்களை இழந்துவிட்டார்கள். அதில் 48 இலட்சம் பேர் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்திருக்கிறார்கள்' என்று புள்ளிவிபரம் வெளியிட்டிருக்கிறது.


**மூன்று வெளிநாட்டவர்களுக்கு மரண தண்டனை!**

உக்ரைனின் டொனட்ஸ்க் பகுதியில் வசித்துவரும் ர்ஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களும் உக்ரைன் படைகளை எதிர்த்துச் சண்டையிட்டு வருகின்றனர். இந்தக் கிளர்ச்சியாளர்கள் அண்மையில் உக்ரைனுக்கு ஆதரவாகச் சண்டையிட்டு வந்த மூன்று வெளிநாட்டு வீரர்களைச் சிறைப்பிடித்தனர். அந்த மூவரையும் டொனட்ஸ்க் மக்கள் குடியரசின் கீழ் இயங்கும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். ஜூன் 10 அன்று, வெளிநாட்டைச் சேர்ந்த அந்த மூவருக்கும் மரண தண்டனை விதித்திருக்கிறது டொனட்ஸ்க் குடியரசு நீதிமன்றம். இந்த மூவரில், இருவர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மொராக்கோ நாட்டைச் சேர்ந்தவர். 'சர்வதேச அங்கீகாரம் பெறாத டொனட்ஸ்க் குடியரசின் நீதிமன்றம் விதித்த இந்த தண்டனை செல்லாது' என்று உக்ரைன் அரசு கண்டனம் தெரிவித்திருக்கிறது.

ஜெனிவா ஒப்பந்தத்தின்படி, போர்க் கைதிகள் கொல்லப்படக் கூடாது. இருந்தும், 'கைதுசெய்யப்பட்ட மூவரும் வெளிநாட்டைச் சேர்ந்த கூலிப்படைகள், அவர்கள் போர்க் கைதிகள் என்ற வரைமுறைக்குள் வர மாட்டார்கள். எனவே, அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை செல்லும்' என்று ர்ஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் வாதிட்டு வருகிறார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஜெயிலர்" ஆகும் சுப்பர் ஸ்டார்




சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் புதிய படத்திற்கு "ஜெயிலர்" என பெயரிடப்பட்டு அதன் டைட்டில் லுக் வெளியிடப்பட்டிருக்கிறது.

"அண்ணாத்த" படத்தை தொடர்ந்து சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் புதிய படத்தை, "பீஸ்ட்" படத்தை இயக்கிய இயக்குநர் நெல்சன் திலீப்குமார் இயக்குகிறார்.

அனிருத் இசையமைக்கும் இந்த படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் கலாநிதி மாறன் பிரம்மாண்டமான பொருட் செலவில் தயாரிக்கிறார்.

"தலைவர் 169" என தற்காலிகமாக பெயரிடப்பட்டிருந்த இப்படத்திற்கு தற்போது "ஜெயிலர்" என பெயரிடப்பட்டு, அதன் டைட்டில் லுக் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த திரைப்படத்தில் ரஜினி காந்துடன் ரம்யா கிருஷ்ணன், ஐஸ்வர்யாராய், சிவகார்த்திகேயன், சிவராஜ்குமார், கே. எஸ். ரவிகுமார், பிரியங்கா அருள்மோகன் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடிப்பதாக தகவல்கள் வெளியாகி யிருக்கிறது.

இந்த படத்தின் படப்பிடிப்பு ஜூலை மாத இறுதியில் ஹைதராபாத்தில் தொடங்கும் என்றும் படக்குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள். "ஜெயிலர்" படத்தின் திரைக்கதையில் ரஜினியின் நண்பரும் இயக்குநரும் நடிகருமான கே.எஸ். ரவிக்குமார் பங்களிப்பு அளித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கிறது.

# கவியரசர் கண்ணதாசன்



கண்ணதாசன் 24 ஜூன் 1927 - 17 ஒக்டோபர் 1981 புகழ் பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், கட்டுரைகள் பல எழுதியவர். சண்டமாருதம், திருமகள், திரை ஒலி, தென்றல், தென்றல் திரை, முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். தமிழக அரசின் "அரசவைக் கவிஞராக" இருந்தவர். இவர் சாகித்திய அகாதமி விருது 1980 பெற்றவர்.

**வாழ்க்கைக் குறிப்பு**

கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. இவர் தமிழ்நாட்டில் உள்ள காரைக்குடி அருகே சிறுகூடல்பட்டி என்ற ஊரில் இந்து மதத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் சாத்தப்ப செட்டியார், விசாலாட்சி ஆச்சி இணையாருக்கு 8 ஆவது மகனாக பிறந்தார்.

இவருடன் உடன் பிறந்தோர் 10 பேர். சிறு வயதில் இவரை சிகப்பி ஆச்சி (மறைவு 25-12-1958) என்பவர் 7000 ரூபாய்க்கு தத்து எடுத்துக்கொண்டார். அவர் வீட்டில் நாராயணன் என்ற பெயரில் வாழ்ந்தார். ஆரம்பக் கல்வியை சிறுகூடல்பட்டியிலும், அமராவதிபுதூர் உயர் நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்தார். 1943 ஆம் ஆண்டில் திருவொற்றியூர் ஏஜாக்ஸ் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். ஒரு பத்திரிக்கை ஆசிரியர் பணிக்கு சென்றபோது அவர் வைத்துக் கொண்ட புனைப் பெயர் கண்ணதாசன்.

கண்ணதாசனுக்கு முதல் திருமணம் பொன்னழகி என்னும் பொன்னம்மாள் (இறப்பு:மே 31, 2012) என்பவரோடு 1950 பெப்ரவரி 9ஆம் நாள் காரைக்குடியில் நடைபெற்றது. இவர்களுக்கு கண்மணிசுப்பு, கலைவாணன், ராமசாமி, வெங்கடாசலம் ஆகிய 4 மகன்களும், அலமேலு சொக்கலிங்கம், தேனம்மை, விசாலாட்சி ஆகிய 3 மகள்களும் உள்ளனர்.

கண்ணதாசன், பார்வதி என்பவரை 1951 நவம்பர் 11ஆம் நாள் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு காந்தி, கமல், அண்ணாதுரை, கோபால கிருஷ்ணன், சீனிவாசன் ஆகிய 5 மகன்களும், ரேவதி, கலைச்செல்வி ஆகிய 2 மகள்களுமாக ஏழு குழந்தைகள் உள்ளனர்.

ஐம்பதாவது வயதில் புலவர் வள்ளியம்மை என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு விசாலி என்னும் மகள் ஒருவர் உள்ளார்.

கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

# திரைவிமர்சனம்



நாயகி நயன்தாராவின் குழந்தைக்கு நுரையீரல் பாதிப்பால் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மேலதிக சிகிச்சைக்காக கோயம்புத்தூரில் இருந்து கொச்சினுக்கு பேருந்து மூலம் செல்கிறார். செல்லும் வழியில் நிலச்சரிவில் பேருந்து சிக்கிக் கொள்கிறது.

இதில் நயன்தாரா தனது குழந்தை, பொலிஸ் அதிகாரி, முன்னாள் எம்.எல்.ஏ, காதலர்கள், பேருந்து ஓட்டுநர் உள்ளிட்ட 9 பேர் சிக்கிக் கொள்கிறார்கள். இறுதியில் பேருந்தில் சிக்கிக் கொண்டவர்கள் அனைவரும் தப்பித்தார்களா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை. படத்தில் நாயகியாக நடித்திருக்கும் நயன்தாரா, கோபம், அக்கறை, பாசம், பரிதவிப்பு உள்ளிட்ட உணர்வுகளை திறமையாக வெளிப்படுத்தி அசத்தி இருக்கிறார். குறிப்பாக மகனுக்காக ஏங்கும் காட்சிகளில் மனதை உருக வைக்கிறார். மகனாக நடித்திருக்கும் ரித்விக், முதிர்ச்சியான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். பேருந்துக்குள் லைட் போடும் காட்சியில் படபட வைக்கிறார். கிளைமாக்ஸ் காட்சியில் கண்கலங்க வைத்திருக்கிறார்.

பேருந்து ஓட்டுநர் ஆடுகளம் முருகதாஸ், முன்னாள் எம்.எல்.ஏ, காதலர்கள் ஆகியோரின் நடிப்பு திரைக்கதை ஓட்டத்திற்கு பெரிதும் உதவியிருக்கிறது. பொலிஸ் அதிகாரியாக வருபவர் வில்லத்தனத்தில் மிரட்டியிருக்கிறார். நிலச்சரிவில் சிக்கிய பேருந்து, ஆக்சிஜனுக்காக போராடும் மனிதர்கள், தாய் மகன் பாசம், இயற்கை வளங்கள் ஆகியவற்றை மையமாக வைத்து திரைக்கதை அமைத்து படத்தை இயக்கி இருக்கிறார் இயக்குநர் ஜி.எஸ்.விக்னேஷ்.

பேருந்துக்குள் இருக்கும் நிறைய காட்சிகள் திக் திக் நிமிடங்களாக கொடுத்திருக்கிறார். விஷால் சந்திரசேகரின் பின்னணி இசையும், தமிழ் ஏ.அழகனின் ஒளிப்பதிவும் படத்திற்கு பெரிய பலம். மொத்தத்தில் "O2" அவசியம் தேவை.

# சங்கர்–ராம்சரண் கூட்டணி முடிந்ததும் இந்தியன் –2



ஷங்கர் - கமல்ஹாசன் கூட்டணியில் வெளியாகி மாபெரும் வெற்றியடைந்த திரைப்படம் இந்தியன். இப்படத்தின் இரண்டாம் பாகம் தற்போது உருவாகி வருகிறது.

கடந்த 2020ஆம் ஆண்டு படப்பிடிப்பில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக நிறுத்தப்பட்ட இப்படத்தின் படப்பிடிப்பு, அதன்பின் ஏற்பட்ட சில பிரச்சினைகளால் அப்படியே முடங்கியது.

இதன்பின், மீண்டும் படப்பிடிப்பு துவங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இயக்குநர் ஷங்கர் தெலுங்கிலும், கமல் ஹாசன் விக்ரம் படத்திலும் பிசியாகிவிட்டனர்.

இந்நிலையில், மீண்டும் இந்தியன் 2 தொடங்கும் என்று சமீபத்தில் கமல்ஹாசன் கூறியிருந்தார். அதைத் தொடர்ந்து தற்போது மற்றொரு அப்டேட் கொடுத்துள்ளார்.

அதாவது, தற்போது ஷங்கர் ராம் சரண் படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தின் வேலைகள் முடிந்தபின் இந்தியன் 2 படத்தின் படப்பிடிப்பு துவங்கும் என்று அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் அதிசயங்கள் - பகுதி I



**மீனாட்சி அம்மன் திருக் கோவில்**

மீனாட்சி சுந்தரேசர் ஆலயம் என்றும் ஆலவாய் என்றும் அழைக்கப்படும் மீனாட்சி அம்மன் ஆலயம் மதுரையில் வைகைக்கரையின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. மதுரையை அழிக்க வருணன் ஏழு மேங்களை ஏவியதாகவும் அதனைத் தடுக்க நான்கு திசைகளிலும் நான்கு மேங்களை சிவபெருமான் நிறுத்தி வைத்ததால் மதுரைக்கு நான் மாடக்கூடல் என்றும் பெயர் உண்டு.

மதுரையின் எல்லையை சிவனின் கழுத்திலிருந்த பாம்பு தன் வாலை வாயால் கவ்வியபடி சுட்டிக்காட்டியதால் மதுரைக்கு ஆலவாய் என்ற பெயர் வந்ததாகப் புராணக்கதை ஒன்றுண்டு.

கடம்பவனக் காட்டில் தோன்றிய சுயம்புலிங்கத்தைக் கண்டறிந்து, இந்தக் கோவிலையும், பின்னர் மதுரை மாநகரையும் குலசேகரப் பாண்டியன் உருவாக்கினான். சிவபெருமான் பாண்டியனின் கனவில் தோன்றி இந்த ஆலயத்தை நிர்மாணிக்கும்படி கட்டளை இட்டதால் அதனை சிரமேற்று குலசேகர பாண்டியன் நிறைவேற்றினான்.

15 ஏக்கர் பரப்பளவில் கிழக்கு மேற்காக 847 அடியும், தெற்கு வடக்காக 792 அடியும், உடையது மீனாட்சியம்மன் ஆலயம், இக்கோவிலின் கலையழகுக்கு முக்கிய காரணம் இதனுள் அமைக்கப்பட்ட மண்டபங்கள் தான். ஊஞ்சல் மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், கம்பத்தடி மண்டபம், கிளிக்கூட்டு மண்டம், மங்கையர்க்கரசி மண்டபம், சேர்வைக்காரர் மண்டபம் ஆகியவற்றோடு அழகிய ஆயிரங்கால் மண்டபம் பிரசித்தி பெற்றது.

நான்கு பிரதான கோபுரங்களிலும் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், சிற்பக்கலை பயில்பவர்களுக்கு பொக்கிஷம். தெற்கு கோபுரத்தில் 1571 சிற்பங்களும் மேற்குக் கோபுரத்தில் 1124, கிழக்கு கோபுரத்தில் 1511, வடக்கு கோபுரத்தில் 404, ஆக 6224 சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. அநேகமாக மிக அதிக அளவிலான சிற்பங்கள் செதுக்கப்பட்ட கோபுரங்கள் மதுரையில் அதுவும் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் மட்டுமே காணக் கிடைக்கும் சிறப்பு.


மீனாட்சி அம்மனின் கைகளில் கிளி ஏன் காணப்படுகிறது? பக்கத்தர்களின் விருப்பங்களை, வேண்டுதல்களை நேரடியாக இறைவனிடம் சொல்லும் வல்லமையும் வாய்ப்பும் கிளிக்கு இருப்பதால், அது நிச்சயம் சொல்லும் என்பதுதான் காரணமாம். மீன் தனது குஞ்சுகளை காப்பது போல் பக்தர்களின் குறைகளை தீர்த்து வைப்பாள் மீனாட்சி என்பதால் "அங்கயற்கண்ணி" என்று மற்றொரு பெயரும் உண்டு.

பொற்றாமரைக் குளத்தில் சங்க இலக்கியங்கள் பலவும் அரங்கேறியிருக்கின்றன. ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதிகளுக்குத் தமிழ் மாதங்களின் பெயர்களே சூட்டப்பட்டிருக்கின்றன (சித்திரை வீதி, ஆவணி, மாசி, ஆடி வீதி). அந்தந்த மாதங்களில் நடக்கும் ஆலய விழாக்கள் அந்தந்த வீதிகளில் நடந்திருக்கின்றன.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2642

**கயல்விழி**

எவன் ஒருவன் தன் பலம் அறிந்தும் போராடாமல் இருக்கிறானோ...



அவனை இந்த உலகம் பிச்சை எடுக்க வைக்கிறது

**குமார்**

என்ன தான் இப்ப வித விதமா டூ வீலர் கார்ல எல்லாம் போனாலும்




தென்னை மட்லைல நண்பன உக்கார வச்சி இழுதிட்டு போன நாட்கள்லாம் இனிமையானவை

**யதுரா**

ஆடாய் பிறந்தாலும், ஆணாய் பிறந்தாலும்...



ஞாயிற்றுக்கிழமைகளில் கறிக்கடைக்கு அனுப்பி வைத்து விடுகிறார்கள்.

**வசீகரன்**

கண்ணை மூடிக்கிட்டு தான் தூங்குறோம்



ஆனால் கனவுல மட்டும் எப்படி கண்ணு தெரியுது...


**கயரூபி**



அம்மா என் வீட்டுக்காரர் குழிப்பணியாறம் கேட்கிறார். அதுக்கு எவ்ளோ பெரிய குழி தோண்டனும்? உன்னைப் பெத்ததுக்கு எனக்குதான் குழி தோண்டனும், ஒரு ஆறு அடிக்கு தோண்டு.

**விய**

சும்மா இருங்க எவனாவது போட்டோ எடுத்து பேஸ்புக்ல போட்டுட போறான்..!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

295

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# பாட்டாவுக்கு ஒரு மடல்



அப்பப்பா! நான் உங்களுடைய பேரன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். நான் தொலைதூர தேசத்திலே இருப்பதால் உங்கள் பூட்டனை உங்களுக்குக் காட்ட முடியவில்லையே என்ற குற்ற உணர்வு என்றும் என்னுள்ளே இருந்து கொண்டிருக்கிறது.

அவனைப் பார்த்திருந்தால் நீங்கள் எவ்வளவு பூரித்திருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். இந்த பரந்த பூமியிலே எங்களை நிலை நிறுத்த நீங்கள் பட்ட துயரங்கள் அப்பப்பா!

அண்ட சராசரம் அளவு பரந்து விரிந்திருந்த உங்களது உலகம் கடைசிக் காலங்களில் வீடு என்ற வட்டத்துக்குள் முடங்கிப் போன போது உங்களுக்கு ஏற்பட்ட உள்ளுணர்வுகளைப் புரிந்து கொண்டவர்கள் யார்?

அன்று எனது விருப்பங்களை நீங்கள் ஒவ்வொன்றாகக் கேட்பது ஞாபகம் வருகிறது. கடைசிக் காலத்திலே உங்களது விருப்பு வெறுப்புகளை எவர் தான் கேட்டார்கள்? அன்று எனக்கு தும்மல் எடுத்தாலே நீங்கள் பதறிப் போவீர்களே, ஆனால் உங்களது கடைசிக் காலத்திலே உங்களது உடல், உள சுகத்திலே நான் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தேன் என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்.

அந்தத் துயரங்கள் தெரியாத வயதிலே நீங்கள் என் வலக்கரம் பற்றி பொடி நடையாய் நடந்த தூரங்கள், பள்ளிக் கூட வாசலிலே என்னைக் கூட்டிச் செல்வதற்காகக் கறுப்புக் குடையுடன் நீங்கள் காத்திருந்த காட்சிகள், என்னைக் கண்டிக்கும் பெற்றோரிடம் எனக் காக வக்கீலாய் நீங்கள் வாதாடிய வார்த்தைகள் என எத்தனையோ நினைவுகள் நித்தமும் என் நெஞ்சில் நிழலாடும்.

உங்களது கைப்பிடிக்குள் அன்று நான் உணர்ந்த பாதுகாப்பை அதன் பின் என்றுமே உணர்ந்ததில்லை.

நீதிக்குப் பெயர் போன உங்களது நேர் கொண்ட பார்வை, செங்கோல் போன்ற உங்களது கைத்தடியைப் பிடித்துக் கொண்டு நடக்கும் ராஜ கம்பீர நடை, போலி கலவாத உங்களது பேச்சு, பெருமை கலவாத உங்கள் போக்கு, ஊரவரையும் உற்றவரையும் நெறிப்படுத்துவதையே மூச்சாகக் கொண்ட உங்கள் வாழ்க்கை முறை இவை அனைத்தும் பிற்காலத்திலே மறக்கப்பட்டுப் போனது ஏன்?

இயந்திரமாகி உருண்டோடும் இந்த உலக ஓட்டத்திலே உங்களது உள்ளுணர்வுகளைப் புரிந்து கொள்ள யாருக்கு நேரமிருந்தது? உங்களுக்கு உடம்பு முடியாமல் போன பொழுது நீங்கள் நீங்களாகவே வாழ முடியாமல் தடுத்தது ஏது?கடைசிக் காலத்தில் உங்களது சுதந்திரம் பறிக்கப் பட்டது ஏன்? வயது போனால் பிறர் விதிக்கும் வரை விலக்கணத்திற்குள் தான் வாழ வேண்டும் என்ற விதியை எழுதியது யார்?

சிறுவர்களினதும் பெண்களினதும் உரிமைகள் பற்றிப் பேசத் தான் எத்தனை அமைப்புக்கள்? எத்தனை நிறுவனங்கள்? அவர்களுக்காக குரல் கொடுக்க எத்தனை மனிதர்கள்? ஆனால் பிரயோசனங்களைப் பிழிந்தெடுத்த பின் வீசி எறியும் சக்கைகள் போல பரிதவிக்கும் முதியவர்களின் உரிமை காக்க, முதியோர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க பலமான அமைப்பொன்று கூட உருவாக்கப் படாமல்போனது ஏன்?

அப்பப்பா! நீங்கள் செய்து முடித்தவை எல்லாம் எனக்குத் தெரியும் ஆனால் நீங்கள் செய்ய நினைத்தும் செய்ய முடியாமல் போனவை எவை என்று எனக்குத் தெரியாது.

அன்று எனது ஆசைகள் ஒவ்வொன்றையும் கேட்டு நிறைவேற்றிய உங்களது நிறைவேறாத ஆசைகள் எவை என்று கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூட எனக்கு நேரமில்லாமல் போனது ஏன்?

உங்களது வாழ்வின் இறுதிப் பகுதி உறவுகளின்றி உப்புச்சப்பின்றிப் போனதற்கு யார் காரணம்? உலக சுகாதார மேம்பாட்டுக் காய் எத்தனை முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் இந்த வேளையிலே உங்களது உடல், உள, சமூக நன்னிலையைப் பற்றி சிந்திக்க யாருக்கு நேரமிருந்தது? உங்களது அந்திச் சடங்குகளுக்கு கூட என்னால் வர முடியாது போய் விட்ட எனது துரதிஷ்டத்துக்காக எவரை நொந்து கொள்ள முடியும்? அப்பப்பா! கையாலாகாத உங்களது பேரனை வழமை போல மன்னித்து விடுங்கள்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு rkgej khd cq{s ;reNjf qfis (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்தபோசனையால் சிறுவர்கள் மேலும் பாதிக்கப்படுவர்

## யுனிசெவ் எச்சரிக்கை

**(நியூயோர்க்)**

**இலங்கையில் சிறுவர்களின் மந்தபோசனை நிலைமை மேலும் மோசமாக பாதிக்கப்படலாம் என யுனிசெவ் எச்சரித்துள்ளது.**

யுனிசெவ் அமைப்பின் இலங்கைக்கான பேச்சாளர் பிஸ்மார்க் சுவாங்ஜின் இத்னை தெரிவித்துள்ளார்.

அமர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நான் இன்று காலை கண்விழித்த போது முதலில் ஆராய்ந்த விடயம் இலங்கையில் இன்று மின்சார துண்டிப்பு எந்த நேரத்தில் நிகழ்கின்றது என்பதே.

ஏனென்றெல் நீண்ட நேர மின் துண்டிப்பு, நீண்ட தூர எரிபொருள், வரிசைகள் காலியான பல்பொருள் அங்காடிகள், அதிகரிக்கும் விலைகள் ஆகியனவே இன்று இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளதாரா நெருக்கடியின் குணாதிசயங்களாக காணப்படுகின்றன.

யுனிசெவ் அமைப்பின் மதிப்பீட்டின் படி நாங்கள் உரையாடிய பத்து குடும்பங்களில் ஏழு குடும்பங்கள் தாங்கள் உணவை குறைத்துக் கொண்டுள்ளதாக எங்களிடம் தெரிவித்தனர்.

ஆகவே முன்று நேரம் உணவுண்டவர்கள் தற்போது இரண்டு அல்லது ஒருநேரம் உணவு உண்கின்றனர் மேலும் அவர்களின் உணவின் தரமும் குறைவடைந்துள்ளது.

உலகில் சிறுவர்கள் மந்தபோசனையால் அதிகளவும் பாதிக்கபட்டுள்ள நாடுகளில் இலங்கை ஏழாவது இடத்திலும் பிராந்தியத்தில் இரண்டாவது இடத்திலும் உள்ளது.

உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் இலங்கையில் சிறுவர்களின் மந்தபோசனை நிலைமை மோசமாக பாதிக்கப்படலாம் என அச்சமடைகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-6)

# ரயிலில் சிக்குண்டு இளைஞர் மரணம்

(கொழும்பு)

ரயிலில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. மாத்தறை ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திக்வெல்ல - வெவுருகன்னல பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மாத்தறையில் இருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயிலில் ஏற முற்பட்டபோது தவறி விழுந்த குறித்த இளைஞர் ரயிலின் அடியில் சிக்கியுள்ளார்.

சுமார் ஒரு மணித்தியாலமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை அடுத்து இளைஞர் மீட்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


सत्यमेव जयते

**CONSULATE GENERAL OF INDIA JAFFNA**

**VACANCY**

**Advt. No- JAF/ADM/578/02/2022**

The Consulate General of India, Jaffna has one (01) vacancy for the post of "Chauffeur" carrying a pay scale of Sri Lankan Rupees (LKR) 66600-163200, with a starting monthly salary of LKR 66,600/- excluding 24% COLA. Only Sri Lankan Nationals with 'O' level qualification and above can apply. The applicant should have valid heavy driving license with minimum 3 years of relevant work experience at least. If interested, download the application form https://www.cgijaffna.gov.in/announcements and submit the completed form by post or in person at 14, Maruthady Lane, Nallur, Jaffna by 06/07/2022. (C-4509)

**சொர்க்கம் திருமண சேவை**

1987 இல் பிறந்த மிருகசீரிட நட்சத்திர (government job) உள்ள மணமகனுக்கு உள்நாட்டு மணமகள் தேவை.
1991 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் திருவோணம் நட்சத்திரமுள்ள மணமகனிற்கு உள்நாட்டு மணமகள் தேவை.
1983 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் (விவாகரத்து) அனுச நட்சத்திரம் மணமகளுக்கு உள்நாட்டு மணமகன் தேவை. (1914)

தொடர்பு கொள்ள: சொர்க்கம் திருமண சேவை
0014166661855, 077 887 6969

**உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு**

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு:**

**தொலைபேசி:**

**076 097 3127**
**021 221 7603**

Viber: 076 636 3378

E.mail:
valampurii@yahoo.com


## வேலணை பிரதேச சபை

**ஸ்ரீ நயினாதீவு நாக பூசணி அம்மன் கோயில் வருடாந்த உயர் திருவிழா - 2022**

**பகிரங்க அறிவித்தல்**

வருடாந்த உயர் திருவிழா 29.06.2022 ஆம் திகதி ஆரம்பமாகி 14.07.2022 அன்று நிறைவு பெறுவதனை முன்னிட்டு இக் காலப்பகுதியில் தற்காலிக வியாபார அனுமதியினைப் பெறுவதற்கு வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தில் 24.06.2022க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

24.06.2022 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணிக்கு சபைக்குச் சொந்தமான யாத்திரிகர் மட வளாகத்தில் தற்காலிக வியாபாரம், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கான இடங்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குளிர்பானக்கடைகள், தேநீர் கடைகள், சிற்றூண்டிச்சாலைகள் நடாத்துபவர்கள் முறையான தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்று சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னரே தற்காலிக வியாபார அனுமதி வழங்கப்படும்.

ஏலத்தில் முதல்நிலை பெறுபவர் அன்றைய தினமே ஏலத்தொகையை முழுமையாகச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

உற்சவ காலத்தில் படகு மூலம் கொண்டு வரப்படும் விற்பனைப் பொருட்களுக்கான பட்கு அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஆலயச் சூழலில் வளர்ப்பு நாய்கள், மாடுகள் மற்றும் கட்டாக்காலி விலங்குகள் பொது வழிகளில் மற்றும் பொது வழிகளின் அருகில் கட்டி வைக்கப்படுதல் அல்லது அலைந்து திரிய விடுதல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

நமசிவாயம் கருணாகரமூர்த்தி
தவிசாளர்
வேலணை பிரதேச சபை. (C-4510)

தொடர்புகளுக்கு:
021 221 1505

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார வசதிகள் இன்றி பள்ளிக்குடா கிராம மக்கள்

(அக்கராயன்)



கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடா கிராமத்தில் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டும் அவ்வீடுகளுக்கு மின்சாரத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் மக்கள் வாழ்ந்து வருவதாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் பள்ளிக்குடாவில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட பின்னர் வனவளத் திணைக்கள அதிகாரிகளால் தமது வனப்பகுதியில் அத்துமீறி வீடு அமைத்துள்ளார்கள் எனக் கூறி மின்சாரம் வழங்குவதற்கு தடைகள் ஏற்பட்டன.

குறித்த குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு பூநகரி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பூநகரி பிரதேசத்தில் வனவளத் திணைக்களம் விவசாயம், மீள் குடியேற்றம் எனப் பல்வேறு துறைகளிலும் இடையூறுகளை ஏற்படுத்துவதன் காரணமாக பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக கடந்த காலங்களில் கிளி நொச்சி மாவட்டச் செயலாளரிடம் பூநகரி பிரதேச செயலகத்தினால் முறைப்பாடுகள் செய்யப்பட்டது எனவும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். (4-6-350)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் குடிநீர் விநியோகம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளியில் பிரதேச சபையினால் குடிநீர் விநியோகம் இடம் பெறுவதாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. தற்போது குடிநீர் நெருக்கடி காணப்படுகின்ற கிளாலி, இத்தாவில், இந்திராபுரம், வண்ணாங்கேணி, இயக்கச்சி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் நடைபெறுகின்றது.

எதிர்வரும் மாதங்களில் வறட்சி ஏற்படுகின்ற போது குடிநீர் விநியோகம் அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இதேவேளை இயக்கச்சியில் இராணுவத்தினரால் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட வேண்டிய குடிநீர் கிணறு ஐந்தாண்டுகள் கடந்தும் கையளிக்கப்படாமல் இருப்பதன் காரணமாக இயக்கச்சி பிரதேசத்திற்கான குடிநீர் வழங்கலை மேற்கொள்வதில் சிரமங்கள் உள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் புதிய நீர் மூலகங்களை இனங்கண்டு அவற்றினை குடிநீர் விநியோகத்திற்கான இடமாக மாற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் நீர்த்தாங்கிகள் மூலம் நீண்ட தூரத்திற்கு குடிநீரினைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை இருக்காது எனவும் அவர் தெரிவித்தார். (4-6-350)

# வயோதிப பெண்ணை மிரட்டி பணம், நகை கொள்ளை

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முல்லையடி பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் முல்லையடி பகுதியில் தனியாக வசித்து வந்த வயோதிப பெண் ஒருவரின் வீடொன்றினுள் நள்ளிரவு புகுந்த திருடர்கள் அந்த பெண்ணை அச்சுறுத்தி நகை மற்றும் பணம் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பளை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (4-6-316)

# மின் உபகரணங்கள் திருட்டு இருவர் பொலிஸாரால் கைது

(தருமபுரம்)



கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் கடந்த 16 ஆம் திகதி ஹாட்வெயர் ஒன்றினுள் இருநபர்கள் புகுந்து 2 லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான வீட்டு மின் பாவனைக்கு பொருத்தும் பொருட்களை திருடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக பளை பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் பளை பொலிஸ் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகளின் அடிப்படையில் வவுனியா சாந்த சோலை பகுதியில் ஒருவரும் கிளிநொச்சியில் ஒருவருமாக இருவர் அன்றயை தினம் மாலை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து திருடிச்சென்ற பொருட்களும் மீட்கப்பட்டன. கைதான இருவரையும நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைபடுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். (4-6-316)

# குழுக்களிடையே மோதல் 9 பேர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி இராமநாதபுரம் கல்மடுநகர் பகுதியில் ,அண்மையில் இடம்பெற்ற குழு மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 9 பேரை இராமநாதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

5 பெண்களும் 4 ஆண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஒன்பது பேரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (4-6-316)



பூநகரி பிரதேச சபையின் வருமான மூலமாக காணப்படும் முழங்காவில் பொதுச் சந்தையின் உள்ளக வீதி 1.3 மில்லியன் ரூபா செலவில் நிரந்தர வீதியாக அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(படம்: கிருஷ்ணகுமார்)

# இளைஞன் மாயம்

(முறிகண்டி)

கிளிநொச்சியில் 19 வயது இளைஞன் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

மேற்படி இளைஞன் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையம் ஒன்றுக்கு சென்று இருந்த நிலையில் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரது தாயார் தெரிவித்தார்.

காணாமல் போன தனது மகன் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், தனது கணவர் கடந்த 2005 ஆம் ஆண்டு யாழ். சாவகச் சேரி மீசாலையில் வைத்து அரச படைகளால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்.

இன்று வரை அவர் தொடர்பில் எந்த தகவலும் தெரியாத நிலையில் எனது ஒரே ஒரு மகனும் காணாமல் போயுள்ளார் என தெரிவித்தார். (4-6-100)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 240 | 240 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 500 | 500 |
| தக்காளி | 650 | 600 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 180 | 140 |
| கோவா | 350 | 400 | 350 | 350 |
| கரட் | 240 | 350 | 400 | 350 |
| பூசணி | 160 | 160 | 160 | 160 |
| புடோல் | 260 | 200 | 240 | 250 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 600 | 500 | 700 | 600 |
| வெண்டக்காய் | 160 | 200 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 240 | 240 | 200 |
| பயற்றங்காய் | 350 | 350 | 350 | 320 |
| லீக்ஸ் | 200 | 240 | 360 | 320 |
| பீற்றூட் | 350 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 300 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1000 | 800 |
| போஞ்சி | 800 | 600 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 80 | 80 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 300 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 450 | 500 | 300 |
| முள்ளங்கி | 200 | 150 | — | 300 |
| பொன்னாங்கண்ணி | 60 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 80 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்திருக்கும் வாய்ப்புகளைத் திறம்படப் பயன் படுத்துகிறவனே உண்மையான பெருமைக்கு சொந்தக்காரன்.

– தியோடர் ரூஸ்வெல்ட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டைப் பிரித்து நன்மையடைவீராக!

பெற்றோலுக்கு வரிசையில் நின்ற களைப்பு, கிட்ட நெருங்குகையில் தீர்ந்துவிட்டது என்ற அறிவிப்பு.

அந்தோ! நாட்டின் நிலைமை இப்படியாயிற்றே என்ற கவலை என எல்லாமும் சேர்ந்து கண்ணயர்ந்துபோக,

நரைத்த முடி, கூடவே தாடி, தூய வெண்ணிற வேட்டி சால்வை அணிந்த தோற்றம். ஒட்டுமொத்தத்தில் பிரமரிஷியின் வடிவம் தாங்கிய ஒருவர்.

மகனே! என்றழைத்தார். கவலை ஏனோ என்றார்.

சுவாமி! வளம் பொருந்திய இலங்காபுரி இன்று பஞ்சத்தால் நலிந்து கிடக்கிறது. எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியாத வேதனை.

இப்படியே நிலைமைபோனால், பஞ்சம், பசி, பட்டினியால் மக்கள் மடிவர். மாற்றுவழி ஏதுமில்லை.

நாட்டைக் குட்டிச்சுவராக்கியவர்கள் ஆட்சி நடத்துகிறார்கள். அவர்களைக் காப்பாற்ற ஒரு பிரதமர்.

ஐயனே! ஏற்றுமதிக்கு ஒரு பொருள் இல்லை. உல்லாசப் பயணிகளின் வருகையும் நின்றுவிட்டது.

உரம் இல்லை. வயல் உழுவதற்கு டீசல் இல்லை. அடுத்த நெல் விதைப்பும் சாத்தியமில்லை என்றால், பட்டினிச்சாவைத் தவிர வேறு என்னதான் இங்கு நடக்கும்.

ஐயகோ நிலைமை மோசமாகிவிட்டது. தலைநிமிர முடியாதென்றாயிற்று.

இந்தநிலையில் மீட்சி பெறுவது எங்ஙனம் என்பதும் புரியவில்லை.

சுவாமி! இந்த நாட்டில் பிறந்து நாம் கண்டதெல்லாம் துன்பமும் துயரமுமே. அதிலும் தமிழராய்ப் பிறந்ததால் நாம் பட்ட துயர் கொஞ்சமல்ல.

யுத்தத்தால் துவண்டுபோன நம்மை பொருளாதார நெருக்கடியும் இறுக்கும்போது, எங்கு போவது. எந்த நாட்டில் தஞ்சம் பெறுவது.

ஐயனே! ஆலோசனை உரைமின்! என்றேன்.

மெல்லிய சிரிப்பை உதிர்த்த அப்பெருஞ்ஞானி திருவாய் மலர்ந்தார்.

இலங்கை வாழ ஒரு வழி உண்டு. அதுதான் ஒரே வழியும். சிங்களப் பேரினவாதிகள் செய்த பதர் வேலையால் நாடு கந்தறுந்து போனது.

இனியும் தாமதித்தால் பட்டினிச்சாவுகள் பற்றிய செய்தியே காற்றோடு கலந்து வரும்.

ஆகையால் பேரினவாதிகளுக்கு உரைக்கும்படி கூறுக!

தமிழர் தாயகத்தை தனியாகப் பிரித்து கொடுத்திடுக! எஞ்சியது இலங்கையாக இருக்க, பிரித்தது தமிழீழமாக மலர, புலம்பெயர் தமிழர் புரிகின்ற உதவி இரு தேசத்தையும் வளமாக்கும் – நலமாக்கும்.

இச்செய்தியை கூட்டமைப்போ, பின்னாடி வந்த கூட்டணியோ காங்கிரஸோ ஆட்சித் தரப்பிடமும் அஸ்கிரிய – மல்வத்த பீடங்களிடமும் எடுத்துரைக்க வேண்டும்.

தேவையென்றால் எரிக் சொல்ஹெய்ம், மிச்செல் அம்மையார் மற்றும் இந்தியா, அமெரிக்கா, கனடா, பிரிட்டன் என யாரும் அதனை எடுத்துக் கூறலாம்.

இதைச் செய்வதே படுகுழியில் விழுகின்ற இலங்கையைக் காக்கின்ற வழி என்று கூறிய முனிபுங்கவர் விண்ணிடை ஏறியபோது கண்டது கனவு என்றுணர்ந்தெழுந்தேன்.

# அரசின் மீதான மக்களின் அவநம்பிக்கை எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கு எதிராக மக்களிடையே ஏற்படும் அவநம்பிக்கையானது பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்துமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நிலைமையின் பாரதூரத்தன்மையை மக்களுக்கு தெரிவிப்பதை விடுத்து, நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான செயற்பாடுகள் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் பொதுமக்களை தெளிவுபடுத்துவது அத்தியாவசியமானது என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு செயற்படுகையில், பொதுமக்களின் நம்பிக்கையை பெறுவது மிகவும் முக்கியமானது என சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

(ம-7)

## பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால்

# அரச அதிகாரிகளை பொதுமக்கள் தாக்குவர்

(கொழும்பு)

அரச அதிகாரிகளையும் பொதுமக்கள் தாக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால் மக்கள் அடுத்ததாக அவர்களையே தாக்குவார்கள் என விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹன புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, தற்போதைய நிலைமையை புரிந்து கொண்டு அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்துடன் இணைந்து நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடி நிலைமையைப் புரிந்து கொண்டு, அதற்குத் தீர்வு காண்பதற்கான திட்டங்களை வகுப்பதில் அரச அதிகாரிகள் முன்வர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# 7 மாதங்களுக்கு போதுமான அரிசி கையிருப்பில் உண்டு

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ

(கொழும்பு)

தற்போது கையிருப்பிலுள்ள அரிசி எதிர்வரும் 7 மாதங்களுக்கு போதுமான்தாக இருக்கும் என எதிர்பார்ப்பதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரிசி இறக்குமதி தொடர்ந்தும் இடம்பெறும் எனவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதனால் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படாது எனவும் பருப்பு மற்றும் சீனிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த வாரம் இது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் அறிவிக்கப்பட்டதுடன், வர்த்தகர்களுடனும் கலந்துரையாடப்பட்டதாக வர்த்தக வாணிப மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த வாரமளவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (ம-7)

## 3 எரிபொருள் ஊர்திகளின் அனுமதிப்பத்திரம் ரத்து

(கொழும்பு)


3 எரிபொருள் தாங்கி ஊர்திகளின் அனுமதிப் பத்திரம் உடன் அமுலாகும் வகையில் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனங்களினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

3 எரிபொருள் தாங்கி ஊர்திகளில் இருந்து சட்ட விரோதமான முறையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட விதம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வைரலாக்கப்பட்ட காணொளிகள் தொடர்பில் உரிய விசாரணைகள் நிறைவடையும் வரை இந்த தீர்மானம் அமுலில் இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## பாவ வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்...



ஆதாமின் வம்சத்தில் வந்த மனித குலம் தொடர்ந்து பாவம்செய்து வருகிறது. ஒருவர் பிறந்ததிலிருந்து விபரம் தெரியும் வயதுவரைஅவனது தவறுகள், இறைவனால் காணப்படாதது போல்இருக்கும். 'அறியாத காலத்தில் தேவன் தெரியாதது போல் இருந்தார்', என்று வேதம் கூறுகிறது.

ஆனால், தான் செய்வது சரி அல்லது தவறு என்று விபரம் தெரியத் தொடங்கிய பிறகு நாம் எப்படி செயற்படுகிறோம் என்பதை இறைவன் கவனிக்கிறார். மனதுக்கு தவறு என்று தெரிந்த பிறகு அதை விட்டுவிடுகிறோமோ? அல்லது, தவறுகளை செய்வதற்கு மனம் அனுமதிக்காவிட்டாலும், அதைத் தொடர்ந்து செய்வதற்கு நாடுகிறோமா? அதைத் தொடர்ந்து நாடுவதும் பின்னர் அதற்கு அடிமையாவதும் பாவம்.

ஆக, தவறுகளை செய்வது மனிதனின் தன்மையே, ஆனால் தவறு என்று தெரிந்த பிறகு அதைத் தொடர்ந்து செய்வதுதான் பாவம்.

அதுவே அவனை கேடுகளுக்கு உள்ளாக்குகிறது. செய்வது சரியா? தவறா என்பது அவனவனுக்கு அளிக்கப்பட்டுள்ள சிந்தனையும் மனசாட்சியுமே தீர்க்கும். இது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, மனிதகுலம் முழுவதுக்கும் பொருந்தும். எனவே பாவமற்ற வாழ்க்கையை மேற்கொள்வதற்காக இறைவனை முழுமனதோடு தேடுவது மிகவும் அவசியம். இறைவனைத் தேடாத மனது இல்லாதவர்கள் கேடான சிந்தனைக்கு ஒப்புக் கொடுக்கப்படுகிறார்கள். (ரோமர் 1:28). கேடான சிந்தனையால் அவர்கள் தொடர்ந்து பாவ வாழ்க்கையை மேற்கொண்டு, இறுதியில் எந்த வகையிலாவது இழப்புக்கு உள்ளாகிறார்கள். பாவம் என்று தெரிந்தும் அதில் நீடித்து இருப்பவனுக்கு அதிக தண்டனைகள் உண்டு. அவன் அநேக அடிகளால் அடிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2022-16.07.2022



**சேவை செய்வதில் முன்னுதாரணமாகத் திகழும் சிம்ம இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். குருவின் பார்வையால் சுபகாரியங்கள் நடைபெறலாம்.

**ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆனி 4 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.

**மிதுன - புதன் சஞ்சாரம்**

ஆனி 11 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். இலாபாதிபதி புதன் இலாப ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் நல்ல நேரமாகும். சூரியனோடு புதன் இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குகிறார். எனவே கல்வி கலை சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் இடத்தில் உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புக்கள் கிடைக்கும்.

**மேஷ - செவ்வாய் சஞ்சாரம்**

## தொட்ட காரியங்களில் வெற்றி!

ஆனி மாதம் 12 ஆம் திகதி, மேஷ இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். மேஷம் செவ்வாய்க்குச் சொந்த வீடாகும். இதுவரை சனியின் பார்வையில் இருந்த செவ்வாய், இப்பொழுது விலகுவதால் எல்லா வழிகளிலும் நன்மை கிடைக்கப் போகிறது. யோகம் செய்யும் கிரகமான செவ்வாய் சொந்த வீட்டில் பலம் பெறும் பொழுது, சொத்து, சொந்தம், காரிய வெற்றி, வருமானம் போன்றவற்றில் திருப்தி நிலவும். சென்ற மாதத்தில் தடையாக இருந்த ஒரு சில காரியங்கள் தானாக நடைபெறும்.




**கடக - புதன் சஞ்சாரம்**

ஆனி 28 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு தன இலாபாதிபதியான புதன், விரய ஸ்தானத்திற்கு வரும் போது, கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும். நீண்ட நாட்களுக்கு முன்தோன்றிய நோய் மீண்டும் தலைதூக்கும். செலவு அதிகரிக்கும். வெளிநாடு சென்றவர்கள், சொந்த ஊர் திரும்பும் சூழ்நிலை ஏற்படும். மிதுன - சுக்கிரன் சஞ்சாரம் உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான அவர், மிதுனத்திற்கு வரும் போது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். வீடு வாங்கும் அல்லது கட்டும் முயற்சி கைகூடும்.

வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்திற்கான அழைப்புகள் வரலாம். இல்லத்தில் மங்கல ஓசை மற்றும் மழலையின் ஓசை கேட்கும்.

பொது வாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். வீண் பழிகளில் இருந்து விடுபடுவீர்கள். இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை தோறும் கற்பக விநாயகர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும். ஆரோக்கியத்திலும் பாதிப்பு ஏற்பட்டு அகலும். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடு உருவாகாமல் இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகள் வழியில் சுபவிரயங்கள் ஏற்படும்.

பணப்பற்றாக்குறை ஏற்படாது என்றாலும் மனநிம்மதி குறையும். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. கேட்ட சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**நல்ல கருத்துக்களை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளும் கன்னி இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக் கிறார். குருவின் பரிபூரண பார்வையும் கிடைக்கிறது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியாக எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆனி 4 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய திருப்பங்களும், தொழில் முன்னேற்றமும் ஏற்படும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் மற்றும் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். முன்னோர் சொத்துக்களில் ஆதாயமும், முறையான பங்கீடுகளும் வந்து சேரும்.

**மிதுன - புதன் சஞ்சாரம்**

ஆனி 11 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன், 10 ஆம் இடத்திலேயே சஞ்சரிப்பது யோகம் தான். உங்கள் இராசிநாதனாகவும் புதன் இருப்பதால் தொழில் முன்னேற்றம் ஏற்படும். நல்ல தகவல்கள் உங்களைத் தேடி வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். புதிய

## பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்!

வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேஷ - செவ்வாய் சஞ்சாரம்**

ஆனி 12 ஆம் திகதி, மேஷ இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு 3, 8-க்கு அதிபதியான செவ்வாய், அஷ்டமத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. எதையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகும். விரயங்கள் அதிகரிக்கும். வீடுமாற்றம், இடமாற்றம் வேதனை தருவதாக அமையலாம். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். தன்னம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.




**கடக - புதன் சஞ்சாரம்**

ஆனி 28 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியான புதன் இலாபஸ்தானத்திற்கு வரும் போது பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். உடன் பிறப்புகளின் வழியே இருந்த கோபங்கள் மாறும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் வாய்ப்பு உண்டு. வீடு, இடம் வாங்கும் யோகம் ஏற்படும். ஆரோக்கியம் சீராகும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள்.

**மிதுன - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆனி 29 ஆம் திகதி, மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். 9-க்கு அதிபதி 10 இல் சஞ்சரிக்கும் இந்த நேரம், ஒரு பொற்காலம்தான். தொழிலில் கிளைத் தொழில் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சுபச் செலவுகள் அதிகரிக்கும். உறவினர்களுக்குள் ஏற்பட்ட உரசல்கள் மாறும். குடும்பத்தில் மற்ற உறுப்பினர்களுக்கும் வேலை கிடைத்து, வருமானம் பெருகும். இம்மாதம் தேய்பிறை அஷ்டமியன்று பைரவரை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் வரவும், செலவும் சமமாகும். குரு பார்வை இருப்பதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி வரும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். சுபச்செலவுகள் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்குப் பாராட்டும், புகழும் கூடும். மேலிடத்தில் கேட்ட சலுகைகளும் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று முதல்...

சந்தைக்கு விடுவிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய அரிசி வியாபாரிகளும் இதே விலையில் அரிசியை வழங்க வேண்டும் என அவர் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ம-7)

## கொழும்பு பாட...

என்பவற்றின்நடவடிக்கைகளை அடுத்த வாரம் நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், நாளை முதல் எதிர்வரும் 24ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இவ்வாறு விடுமுறை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதான நகரங்கள் இல்லாத பகுதிகளில் உள்ள பாடசாலைகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மேல் மாகாணம் உட்பட சகல மாகாணங்களிலும் உள்ள கல்வி அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## ஆனைக்கோட்டை...

பகுதியைச் சேர்ந்த சின்னையா ராசா என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தவேளையிலேயே குறித்த நபர் உயரிழந்துள்ளார்.

சடலம் தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## யாழ்.சர்வதேச...

வித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு சென்று, விமான நிலையத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச விமானங்களை வரவேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுவதோடு, இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த விமானங்கள் வருகை தரும் என எதிர்பார்க்கிறேன்.

அதனூடாக புலம்பெயர் தமிழர்கள் தமது தாயக நிலத்துக்கு நேரடியாக விமானமூடாக வருகைதர முடியும் எனத் தெரிவித்தார். (ம-7,33)

## விசுவமடுவில்...

ணில் இருந்த இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நேற்று இரவு கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

அமைதியின்மையைத் தொடர்ந்து பொதுமக்கள் இராணுவத்தினர் மீது போத்தல்களால் வீசினர்.

இதனால் இராணுவத்தினர் மேல் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

இதன்போது இராணுவத்தினரால் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மேலுமொரு இராணுவ வீரர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகின்றது. (ம-7,316)

## சுகாதாரத் துறை...

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து சேவை நெருக்கடி ஆகியவற்றின் காரணமாக வைத்தியர்கள் உரிய நேரத்திற்கு வைத்தியசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையேற்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் எனவும் அந்த சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறை உள்ளடங்கலாக அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அனைத்துச் சேவைகளும் எவ்வித இடையூறுமின்றி இயங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

ஆனால் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வைத்தியர்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த சுகாதார ஊழியர்களும் உரிய நேரத்திற்கு வைத்தியாசாலைக்குச் செல்ல முடியாத ,நிலைக்கு முகங்கொடுத்திருக்கின்றனர்.

ஏற்கெனவே உயிர்காக்கும் மருந்துகள் உள்ளடங்கலாக அத்தியாவசிய மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும், வைத்தியர்கள் மனிதாபிமான அடிப்படையில் ஏதேனும் மாற்றுவழிகளைப் பயன்படுத்தி மருத்துவ சேவையை இயலுமான வரை வழங்கி வருகின்றனர்.

ஆனால் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் போக்குவரத்து நெருக்கடி தொடருமேயானால், எதிர்வரும் ஓரிரு வாரங்களில் சுகாதாரத் துறை முற்றாகச் செயலிழக்கக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

இதுகுறித்து சுகாதார அமைச்சுடன் இணைந்து மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம்.

அதில் வைத்தியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்திருந்த போதிலும், இன்னமும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எனவே சுகாதாரத் துறையின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இவ்விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## 1ஆம் திகதி...

தற்போதைய எரிபொருள் நிலைமைகள் தொடர்பில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஊடக சந்திப்பொன்றினை நேற்று நடத்தியிருந்தார்.

அதில் கருத்துத் தெரிவித்த அவர்,

யாழ்ப்பாணத்துக்கு 50 இலட்சம் லீற்றர் டீசல், 30 இலட்சம் லீற்றர் பெற்றோல், 20 இலட்சம் லீற்றர் மண்ணெண்ணெய் ஒரு மாதத்துக்கு தேவையாக இருக்கின்ற போதிலும் அதில் 2/3 பங்கு மாத்திரமே தற்சயம் கிடைக்கப் பெறுகின்றது.

எனவே எரிபொருள் அனைவருக்கும் கிடைக்கப் பெறும் வகையில் பங்கீட்டு அட்டை முறைமைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், பொது மக்களுக்கான பங்கீட்டு அட்டைகள் கிராமசேவகர் ஊடாகவும் அரச உத்தியோகத்தர்கள், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கான அட்டைகள் நிறுவன பிரதானிகள் ஊடாக வழங்கப்பட்டு பிரதேச செயலர் ஊடாக உறுதிப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்

மேலும் இது மிகவும் சிக்கலான ஓர் திட்டம் எனக் கருத்துரைத்த அவர், ஒருவேளை ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் இல்லாவிடின் நிலைமை பாரதூரமாகும் எனவும் இத்திட்டத்துக்கு பொதுமக்கள் முடிந்தளவு ஒத்துழைப்பினை வழங்குவதோடு மீண்டும் மீண்டும் எரிபொருளை பெற்றுச் சேமிப்பதனையும் தவிர்க்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். (ம-7)

## பொலிஸாருக்கு...

தர்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொலிஸ் நிலைய வாகனங்களுக்கு எரிபொருளை நிரப்ப பொலிஸார் முயன்றபோது பொதுமக்களிடமிருந்து இடையூறுகளை எதிர்கொண்டதாக தெரிவித்த அவர் பொலிஸாருக்கு எரிபொருள் கோட்டா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாது என்றும் குறிப்பிட்டார்.

கலவரங்களைத் தடுப்பது, குற்றவாளிகளைக் கைது செய்தல், போதைப்பொருள் கடத்தலை ஒழித்தல், போக்குவரத்து ஒருங்கிணைப்பு போன்ற கடமைகளை நிறைவேற்ற வேண்டுமானால் பொலிஸாருக்கு எவ்வித இடையூறும் இன்றி எரிபொருளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)



































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 ஆம் ஆண்டு மீனராசி, உத்திரட்டாதி 3 ஆம் பாதம் பிறந்த மேல் படிப்பு படித்த திருகோணமலையில் தனிவியாபாரம் செய்யும் மணமகனுக்கு படித்த நற்குணமுடைய மணமகளைத் தேடுகின்றோம்.
(செவ்வாய் குற்றம் இல்லை) (11867)

071 658 7658, 076 060 6232

## சுப்பர் மாக்கட் விற்பனைக்குண்டு

சுன்னாகம் வீதி புத்தூரில் நிலப்பரப்பு 5 விஸ்தீரணம் கொண்ட கொழும்பு சுப்பர் மாக்கட் பிறைவற் லிமிட்ட நிறுவனமும் அத்துடன் இணைந்த வீடும் சுற்று மதிலும் கிணறும் அமைந்த வியாபார நிறுவனமானது விற்பனைக்கு உண்டு. (11909)

- 071 480 3765

## ஆசிரியர் தேவை

தரம் 6 - 11 வரை
(விஞ்ஞானம், தமிழ், கணிதம்)
இடம் - தெல்லிப்பளை
077 834 3666

## அறம் கல்வி நிலையம்

(தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு பின்)
புலமைப்பரிசில் வகுப்பு
தரம் - 3,4 (11858)
(உயர்ந்த பெறுபேறுக்கு உத்தரவாதம்)
077 801 6943

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 10 பரப்பு காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(11906)

**பார்வையிடும் நேரம்**
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை - மூன்று இலட்சம்

தொடர்பு:- 076 658 3621, 076 436 5814

## பதவி வெற்றிடங்கள்

HR நிறுவனத்தின் கிளைகளுக்காக புதிய அனுபவம் உள்ள. அனுபவம் அற்ற Gr. 10, O/L, A/L படித்த விண்ணப்பதாரிகள் இணைக்கப்படவுள்ளனர். விண்ணப்பதாரியின் தகுதிக்குரிய பதவி மற்றும் பயிற்சி வழங்கி நிரந்தர வேலையில் இணைக்கப்படுவர்.

பயிற்சியின் போது 01 ஆம் மாதம் 20,000/=, 02 ஆம் மாதம் 30,000/= ரூபாவும், 03 ஆம் மாதம் 38,000/= ரூபா வருமானம் பெற்றுக்கொள்ள முடியும். பயிற்சி காலத்தின் பின்னர் அடிப்படை சம்பளம், ஊக்குவிப்புத் தொகை, EPF, ETF, Insurance போன்ற சலுகைகள் வழங்கப்படும். (11924)

ஆர்வமுள்ளவர்கள் 077 570 7584 இவ் இலக்கத்திற்கு SMS செய்யவும்.

074 200 5573, 021 722 3317, 074 200 5568

## T.V.M திருமண சேவை



T.V.M MATRIMONY
அரச அங்கிகாரம் பெற்ற திருமண சேவை
பதிவு இலக்கம் VE/GS/FIN/BR/757
(11923)

எமது சேவைகள்
உள்நாட்டு, வெளிநாட்டு திருமணம்
வீடு, காணி வாங்குதல் / விற்றல்

அலுவலக நேரம் : 9.00 - 6.00 p.m
கி. தங்கராசா.
பலாலி வீதி, உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகாமை, உரும்பிராய்
077 151 0027, 076 129 4511

குறிப்பு :-பலாலி வீதி, உரும்பிராய் மேற்கில் இயங்கிவந்த எமது நிறுவனம் தற்போது பலாலி வீதி, உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29 . 04 . 1944

மறைவு
19 . 06 . 2021

அமரர்
# நாகம்மா தர்மலிங்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியை

எங்கள் குடும்ப குலவிளக்கே அம்மா...!
கண்மூடித்திறக்கும் முன் ஓராண்டு கடந்துவிட்டது.
எங்கள் நெஞ்சறைக் கூட்டில் அழியா ஓவியம் நீங்கள் அம்மா...
உறவுகளை தவிக்கவிட்டு இமைகளை மூடிவிட்டீர்களே!
நீங்கள் மறைந்து ஓராண்டு போனதென்ன...
உங்களை நினைத்து நெஞ்சம் துடிப்பதென்ன?
ஓராண்டென்ன ஆண்டுகள் ஆகட்டும் ஆயினும்
மறவோம் நாம் உங்கள் அன்புமுகம்தனை...

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
உங்கள் அன்பு மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

முள்ளியவளை மேற்கு,
முல்லைத்தீவு. (11864) குடும்பத்தினர்.

## தேவை

பளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு கனரக வாகன ஓட்டுனர் ஒருவர் தேவை. தங்குமிடம் மற்றும் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (11919)

077 365 6826
077 498 8239

## குத்தகைக்கு

சாவகச்சேரி கச்சாய் பகுதியில் தோட்டக்காணி குத்தகைக்கு உண்டு. (11902)

தொடர்பு
076 915 5733

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வடக்கில்
34 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடிச் சந்தியிலிருந்து 2½ இரண்டரைக் கிலோமீற்றர் தூரத்தில் (சமுர்த்தி வங்கி முன் காபெற் வீதியில்)
- கைதடி வடக்கு உப தபாலகம் அருகாமையில்
- நன்னீர், விவசாய நிலங்கள் (நிலப்பரப்பு), குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதி.

(11925)

ஒரு பரப்பின் விலை
இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் (250,000/=)

தொடர்பு
077 288 0152, 077 259 0391

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.